உ

திருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச – ஆவணி – 10—9—75 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ விக்னேஸ்வரர்

"எப்போதும் அகத்து நினைவார்க்கு இடரில்லை
கைப்போ தகத்தின் கழல்"

### 'ஈஸ்வரன்' என்னும் சொற்பொருள் :

விநாயகப்பெருமானுக்கு வழங்கப்பெறும் பல்வேறு திருநாமங்களுள் 'விக்னேஸ்வரர்' என்பதுவும் ஒன்று. 'விக்கினராசர்' என்றும் இப்பெயர் வழங்கப்படுகிறது. விக்கினம் – ஈஸ்வரர் என்ற இரண்டு வடசொற்களால் அமைந்தது இத்திருநாமம். விக்கினம் என்றசொல்லுக்கு இடையூறு, அல்லது தடை என்பது பொருள். ஈஸ்வரர் என்ற சொல் ஐஸ்வரியத்தை (நிறைந்த செல்வம்) உடையவர் என்ற பொருள் தருகிறது. இச்சொல் பொதுச் சொல்லாயினும் காரண இடுகுறியாகச் சிவபெருமானுக்கே வழங்கப்பெறுகிறது. யாவும் நிறையப்பெற்ற பரிபூரணன்

சிவபெருமானே என்பதனுல் ஈஸ்வரர் என்றும் ஈசன் என்றும் இலக்கியங்கள் சிவபெருமானைக் குறிக்கின்றன.

**ஈஸ்வரன் - ஈஸ்வரம் :**

ஈஸ்வரன் என்ற சொல் இங்கே இறைவன் என்ற பொதுப் பொருளில் விநாயகப்பெருமானுக்கு ஆளப்படுகிறது. ஈஸ்வரன் என்பது இறைவனையும், ஈஸ்வரம் என்பது இறைவன் உறையும் கோயிலையும் குறிக்கும். ஈஸ்வரம் என்ற சொல் தமிழில் 'ஈச்சரம்' மற்றும் 'ஈச்சுரம்' என்று வழங்கப்பெறும். இராஜராஜன் என்பது மன்னன் பெயர். இராஜராஜேஸ்வரன் என்பது இராஜராஜன் வணங்கும் கடவுள் எனப் பொருள்தரும். இராஜ ராஜேஸ்வரம் என்பது இராஜராஜனின் கடவுள் உறையும் இடம் என்று அமையும். இவ்வாறே இராமன் வழிபட்ட இறைவன் உறையுமிடம் இராமேஸ்வரம் என்பதாயிற்று.

**போக்கலும் - ஆக்கலும் :**

எனவே, விக்னேஸ்வரர் என்ற சொல்லுக்கு, இடையூறு களுக்கு இறைவர் என்பது பொருளாகிறது. இறைவனது எண்ணிறந்த ஆற்றல்களுள், இடையூற்றை ஆளும் இவ்வாற்ற லும் ஒன்று. அவ்வாற்றல் முனைந்து நிற்க விளங்குபவரே விநாயகப்பெருமான். ஆதலின் விக்னேஸ்வரர் என்ற சொல், தம்மை வழிபடுவோர்க்கு இடையூற்றைப்போக்குதலும், வழிபடா தார்க்கு இடையூற்றை ஆக்குதலும் செய்பவர் எனப் பொருள் தருகிறது. எனவே, விநாயகர் அன்பர்களுக்கு நன்மையையும், வன்பர்களுக்கு இடையூற்றையும் தருபவர் என்பது போதரு கிறது.

**நெஞ்சில் எழும் ஐயம் :**

'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்னும் பெருங் குணத்து இறைவன், வழிபடுவோர்க்கு இடையூற்றைப் போக்கு வதோடு அமையாது, வழிபடாதார்க்கு இடையூற்றை ஆக்குபவ னாகவும் இருக்கிறுன் என்றால் அவனும், விருப்பு வெறுப்பு உடையவனாகக் கருதப்பட்டுத் தலைமைக் குணத்திலிருந்து தாழ்ந்தவனாக மாட்டானா என ஐயம் எழுவது இயல்பே. ஆழ்ந்து நோக்கினால் விநாயகப்பெருமானின் இச்செயல், உலகியல் நோக் கிலும் பொருத்தமாவதை உணர முடியும்.

**அறக்கருணை - மறக்கருணை :**

எவரேனும், யாதாயினும் ஒரு செயலை மேற்கொண்டு அதன் கண் முயலுங்கால், அதற்கு இடையூறு வருதல் இயல்பு அவ்

இடையூற்றுக்குக் காரணம் அவரது வினையே. வினை என்பது அவரவர்களும் முற்பிறப்பில் செய்த செயல்களேயாகும். நல்ல செயல்கள் புண்ணியம் என்றும், அல்லாத செயல்கள் பாவம் என்றும் சமய வழக்கில் கூறப்படும். அவ்வினை இறைவன் வழி பாட்டினால் நீங்கற்பாலதாகும். ஆகவே, ஒரு செயலைத் தொடங்குங்கால் அஃது இடையூறின்றி இனிது முற்றுதற்பொருட்டு இறைவனை வணங்கித் தொடங்குதல் வேண்டும் என்பதாயிற்று. அங்ஙனம் வணங்குங்கால், இறைவனை இடையூறு நீக்குபவனாகக் கருதியே வணங்கவேண்டுதலின், அவ்விடத்தில் இறைவன் இடையூறு நீக்குபவனாக இருந்தே தன்னை வணங்குவோர்க்கு அருள்செய்வான். இதனாலேயே யாதொருசெயலாயினும்அதனைத் தொடங்குங்கால் அஃது இடையூறின்றி இனிதுமுடிதற்பொருட்டு முதற்கண் விக்னேஸ்வரரை வழிபட்டுத் தொடங்குதல் மரபாயிற்று. இனி, இறைவனை வணங்காதார்க்கு, வினை நீங்குதல் கூடாமையேயன்றி, வணங்காமைதானே குற்றமாதலின் அவர்க்கு இடையூற்றை ஆக்கி வணங்கச்செய்யும் விநாயகப் பெருமானின் செயல் மறக்கருணையாகி இறைமைத் தன்மைக்கு மேலும் சிறப்பாக்குகிறது. நடைமுறை வாழ்க்கையிலும், அரசு இதனை மேற்கொள்ளுகின்றது. அரசுக்குக் கட்டுப்பட்டு நெறியோடு வாழ்வார்க்கு வேண்டிய நலன்களை விளைக்கும் அரசு, சமுதாயத்திற்குத் தீமை விளைவிக்கும் கொடியோர்களைத் தண்டித்துத் திருத்தவும் செய்கிறது. தீமை அகற்றி நன்மை வளர்க்கும் இச்செயல் அறமாகும் என்பதனைத் திருவள்ளுவரும்,

“ கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் ”

என விளக்குவர். அரசின் இச்செயலை உணரும் நாம் விநாயகப் பெருமானின் அருளிப்பாட்டை உணர்வது எளிதேயாகும். இதுபற்றியே விநாயகப்பெருமானின் பதினாறு திருநாமங்களைக் குறிக்கும் ‘ ஷோடச நாமாவளி ’

“ ஓம் விக்ந ராஜாய நம ”

எனப்பெருமானைக் குறித்து வாழ்த்தி வணங்குகிறது.

உலகியலில் ஒரு நிகழ்ச்சி :

இடையூற்றை ஆக்கும் செயல் கருணையாதலை உலகியலில் பலவாறு உணரலாம். தாய் தந்தையர்கள் தம் குழந்தையரைச் சில நேரத்தில் தண்டிப்பது, அவர்களைத் திருத்தி உயர்விக்கவே என்பதனை அனைவரும் அறிவர். இதனை விளக்க ஒரு சிறு நிகழ்ச்சியினைக் காண்போம்.

திருநெல்வேலியில் வாழ்ந்திருந்தார் ஒரு அன்பர். அவர் மகன் ஒருவன் கல்வியில் நாட்டமில்லாது, பள்ளிசெல்ல விழைவில்லாதிருந்தான். தந்தையொடு அடிக்கடி இவனும் உடன் செல்வது வழக்கம். செல்லுமிடங்களில், தந்தைக்குக் கிடைக்கும் உபசாரங்கள் தனக்கும் கிடைக்கமகிழ்ந்தான். ஒரு மரக்கடைக்கு தந்தை அடிக்கடிச் செல்வது வழக்கம். அங்கே இனிய சிற்றுண்டிகளும், தேனீர் முதலிய பானங்களும் வழங்கப்பெற, மகனும் அவற்றைப் பெற்று மகிழ்ந்தான். ஒருநாள் தந்தையாரிடம் தனக்குப் படிப்பு வரவில்லை என்றும் எனவே இக்கடையிலேயே தான் வேலை பார்க்க விரும்புவதாகவும் கூறினன். நல்ல திண்பண்டங்கள் இங்கே கிடைக்கும் என்பதே அவன் விருப்பத்திற்குக் காரணம். தந்தையாரும் இசைந்து கடையில் விடுத்துச் சென்றார்.

மகனின் போக்கறிந்து அவனைக் கல்வியில் திருப்ப நினைத்த தந்தை மரக்கடை வைத்திருக்கும் நண்பரிடம், தம் மகனுக்குக் கடையில், கூட்டுதல், சாணமிடல், மரந்தூக்குதல் முதலிய வேலைகளை இடும்படிக் கேட்டுக்கொண்டார். அவரும் அவ்வாறே வேலை வாங்கத் தொடங்கினர். கடையில் இனியதிண்பண்டங்கள் கிடைக்கும் என்று கருதியவனுக்கு இவ்வேலைகள் ஏமாற்றம் விளைத்தன. தானே விரும்பி ஏற்றுக்கொண்டதால் தந்தையாரிடம் கூறவும் இயலவில்லை. கடைசியில் வேலைப் பளு தாங்காது, தான் கடை வேலையை விட்டுப் படிக்க விரும்புவதாகத் தெரிவித்தான். தந்தை ஒருவாறு இசைந்தார். மீண்டும் பள்ளி சேர்ந்த அம்மாணவன் பின்னர் உற்சாகத்தோடு தன் படிப்பைத் தொடர்ந்தான். இன்று நல்லநிலையில் விளங்குகிறன். தந்தை மகனை வருத்தச் செய்தது அவனைக் கல்வியில் நாட்டமுடையவனுக்கவே தவிர – அவனை வருத்த வேண்டும் என்பதற்காக அல்ல. இந்நிகழ்ச்சியோடு ஒப்பிட்டால் விநாயகப் பெருமானின் மறக்கருணை நன்கு விளங்கும்.

## நடைமுறை மேற்கோள் :

'ஆடிக் கறக்கும் மாட்டை ஆடிக்கற, பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக்கற' என்பது பழமொழி. தீயவர்களைத் தண்டித்து நல்லவர்களை வாழ்விப்பது அரசின் நடைமுறையாயினும், அவசர காலத்தில் கடமைகளைச் சரிவரச் செய்யாதவர்களைக் கண்டு, நடவடிக்கை எடுத்துச் சீர் செய்வதையும், கொடியவர்களைத் தண்டிப்பதையும் இன்றும் காண்கிறேம். மனிதர்களின் மனம் மற்றும் தகுதி வேறுபாடுகளுக்குத்தக விக்னேஸ்வரர்

அவர்களை ஒல்லும் வழி ஆட்கொண்டருளுகின்றார். நமது சித்தாந்த நூலாசிரியர் ஒருவர் இக்கருத்தை,

" நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன் "

என்று அருளிச் செய்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சரிடம் சில நிருபர்கள் சென்று - தாங்கள் நாடார்களுக்கு ( நாடார் சமூகத்தினருக்கு ) ஏதும் நன்மை செய்வதில்லை என்று சொல்லப்படுவது, உண்மைதானா? எனக்கேட்டனர். முதலமைச்சர் 'ஆம்!' என்று கூறிப் பின்னர் காரணத்தை விளக்கினார். என்னை நாடிவந்து குறைவேண்டு வார்க்கு நலஞ்செய்ய முடியுமே தவிர, என்னை நாடார்க்கு (தேடிவராதவர்களுக்கு) எப்படி உதவமுடியும் என்று நயம்படக் கூறினார். இவ்வுலகியல் நிகழ்ச்சி விநாயகப்பெருமானின் அருளிப் பாட்டை ஒருவாறு விளக்கக் காணலாம்.

## உண்மைப் பொருள் உணர்வோம் :

ஆண்டவன் ஒருவனே என்றாலும், உலகத்தை நடத்திச் செல்ல, அவ்வக்காலத்துத் தேவையறிந்து பல திருவுருவங்களில் தோன்றி அருளுவன். பிரணவ வடிவினராகிய விநாயகர் கஜமுகாசுரனை அழிக்க சிவபெருமான் கொண்ட திருவுருவ மாவார். எதிர்த்த கஜமுகனை அடக்கி, அவனையே தம் வாகன மாகக் கொண்டருளினார் விநாயகப் பெருமான். திரிபுரசங்கார காலத்தில் இறைவனது தேர் அச்சினை முறியச்செய்தார் என்ற புராண வரலாறு, யாவராயினும், விநாயகனை வணங்கியே ஒன்றைத் தொடங்க வேண்டுமென்பதை உணர்த்தும் தத்து வத்தைக் குறிப்பதாகும். விநாயகப் பெருமான் பல்வேறு திருக் கோலங்களில், பல்வேறு திருநாமங்களோடு விளங்குகின்றார். இங்கே அவற்றை எல்லாம் சிந்திக்க இடமில்லை. விக்னேஸ்வரர் என்ற திருநாமத்தின் உண்மைப்பொருள் உணர்ந்து, இடையூறு நீங்கி இன்பம் எய்த விநாயகப் பெருமானின் திருவடிகளை வழி பட்டு உய்வோமாக.

" நடையூறு சொன்மடந்தை நல்குவதும் நம்மேல்
இடையூறு நீங்குவதும் எல்லாம் — புடையூறு
சேனைமுகத்து ஆளிரியச் சிறுமுகத்து ஊறுமதத்து
ஆனைமுகத் தானை நினைத் தால் "

---

உ

குருபாதம்

திருச்சிராப்பள்ளி

அருள்மிகு. மட்டுவார்குழலம்மை உடனுறை

அருள்மிகு. தாயுமானுரின் மகாருத்திராபிடேக தரிசனத்திற்குப்பின்

மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

27—7—75

## வேதத்தில் பஞ்சாட்சரம் :

வேதங்களை நான்காகக் கூறுவது மரபு. ரிக், யஜுர், சாமம் அதர்வணம் என்பன அவை. வேதங்கள் நான்காயினும் அதர்வணவேதம் என்பது ஏனைய வேதப் பகுதிகளின் தொகுப்பே என்பதனுல் சிறப்பாகக் கொள்ளப்படுவதில்லை. ரிக், யஜுர், சாமம் என்ற மூன்றே சிறப்பாகக் குறிக்கப்பெறுகின்றன.

"த்ரயிவை வித்யா ; ரிச: யஜூம்ஷி ஸாமாநி"

என்று 'சதபதப்ராம்ஹணம்' கூறுகிறது. "இதிவேதா : த்ரயஸ்த்ரயீ" என்பது அமர நிகண்டு. ரிக்குகளால் துதிக்கிறுர்கள் ; யஜுஸ்ஸால், யஜனம் – அதாவது ஹோமம் செய்கிறுர்கள் ; ஸாம மந்திரங்களால் பாடுகிறுர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இம்மூன்று வேதங்களில் நடுவில் உள்ளது யஜுர் வேதமாகும். இவ்வேதம் நூற்றொரு சாகைகளாக விரிந்துள்ளது. இதன் நடுவில் உள்ள ஐம்பத்தோராவது சாகை 'போதாயனசாகை' எனப்படும். இச்சாகை ஏழு காண்டங்களையுடையது. இதன் இடையுலுள்ள நான்காவது காண்டம் 'சதருத்ரீயம்' என்பது. இதன் நடுவில் உள்ளது ஐந்தாவது

ப்ரச்னம். அதன் நமச்சோமாயச, ருத்ராயச என்னும் அனுவா கத்தின் இருதயத்தில் 'நமச்சிவாயச' என்னும் பஞ்சாட்சர மந்திரம் இடம் பெற்றுள்ளது. எனவே, வேதத்தில் சிறந்தது யஜுர் என்றும், அதிற் சிறந்தது அதன் இடையிலுள்ள ஸ்ரீருத்ரம் என்றும், அதிற் சிறந்தது அதன் நடுவண் உள்ள பஞ்சாட்சர மந்திரம் என்பதும் விளங்குகிறது.

## தேவாரத்தில் சிவமூல மந்திரம் :

வடமொழி வேதத்தின் நடுநாயகமாக அமைந்திருக்கும் ஐந்தெழுத்து, வியக்கத்தக்கவகையில் தமிழ்த் திருமுறைகளாகிய தேவாரத்திலும் அவ்வாறே அமைந்திருப்பது திருவருட்செய லாகவே தோன்றுகிறது.

" ஆரியன் கண்டாய் ; தமிழன் கண்டாய் "

என்றும்,

" வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் "

என்றும் அருளிச்செய்யப்பெற்ற திருமுறைத் தொடர்களின் உண்மையை இவ்வொப்புமை விளக்குகின்றது.

திருமுறை ஆசிரியர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் சமயாசாரியர் எனப் பாராட்டப்பெறுவர். அவருள்ளும், முதல் மூவர் அருளியனவே 'மூவர் தேவாரம்' எனப்படும். மூவர் தேவாரத்துள்ளும் இடைநிற்பது திருநாவுக்கரசர் தேவாரமாகும், நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் நாவுக் கரசரால் அருளிச்செய்யப்பெற்றவை. இம்மூன்றில் இடைநிற்பது ஐந்தாந்திருமுறை. இத்திருமுறையில் இடம் பெற்றிருக்கும் பதிகங்கள் நூறு ஆகும். இறுதியில் உள்ள (தொண்ணூற்றேழா வது பதிகம்) சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை இரண்டு பதிகங்களுக்குரிய பாடல்களைக்கொண்டது. இதனை இரண்டாகக் கொண்டால் பதிகத்தொகை நூற்றொன்றாகும். இவ்வகையில் நடுப்பதிகமாக அமைவது ஐம்பத்தொன்றாம் பதிகமாகிய திருப் பாலைத்துறைப் பதிகமாகும். இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ள பதினொரு பாடல்களில் இடை நிற்பதாகிய ஆறாந்திருப்பாட்டில் 'சிவாய' என்னும் சிவமூலமந்திரம் அமைந்து விளங்குவது தெய்வ அமைப்பாகவே விளங்குகிறது.

" விண்ணி ஞர்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி ஞர்மற வாது சிவாயவென்
றெண்ணி ஞர்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி ஞரவர் பாலைத் துறையரே " (5 - 50 - 6)

என்னும் திருப்பாட்டே இத்தெய்வ அமைப்பினைக்கொண்டிலங்கு கிறது.

இங்ஙனம், வடமொழி வேதத்திலும், தென்தமிழ்த் தேவாரத் திலும் நடுநாயகமாக விளங்கும் பஞ்சாட்சர மந்திரத்தைத் தன்னகத்தேகொண்டு விளங்குவது ஸ்ரீருத்திர மந்திரமாகும்.

## ருத்திராபிடேகம் :

ஒருநாளில் பதினொரு கும்பஸ்னபனம் வைத்து, பதினொரு அந்தணர்கள் ஒவ்வொருவரும் பதினொரு முறை ருத்ர ஜபம் செய்ய, அக்கினியில், ஆசாரியன் பதினொருமுறை உருத்திர ஹோமம் செய்து, முடிவில் வசோத்தாரையுடன் (இடையரூத ஒழுக்கு) யாகத்தைப் பூர்த்திசெய்து, பதினொரு திரவியங்களால் (தைலம், பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், நெய் பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பழச்சாறு, இளநீர், சந்தனம், ஸ்னபனகலசநீர்) சுவாமிக்கு அபிடேகம்செய்து, தூப, தீப, நைவேத்திய, கற்பூரா தனைக்குப்பின் ஸ்னபனத்தை அபிடேகம் செய்து, ஒரு ஆவர்த்தி 'ருத்திரத்திரிசதி' அருச்சனை செய்து தீபாராதனை செய்து முடிப்பது ஏகாதசருத்ராபிடேகம் எனப்படுகிறது. இவ்வாறு பதினொறு நாட்களுக்குத் தொடர்ந்து ஏகாதச ருத்ராபிடேகம் நிகழ்த்தினல் அது மகா ருத்ராபிடேகம் எனப்படும். 121 ஜபம் செய்யும் அந்தணர்கள், ஒவ்வொருவரும் 121 முறை ஜபம் செய்ய, 121 கும்பம் வைத்து பூஜை செய்து ரித்விக்குகளுடன் (ஹோம காரியம் செய்பவர்) ஆசாரியன் 121 முறை ஹோமம் செய்து அபிடேகத்துடன் பூர்த்திசெய்வது அதிருத்திரம் எனப்படுகிறது.

## தாயுமானர் திருப்பணி :

இத்தகு மகாருத்திராபிடேகத்தைத் திருச்சிராப்பள்ளிக் குன்றமர்ந்த அருள்மிகு. மட்டுவார் குழலம்மை உடனுறை அருள்மிகு. தாயுமானர்க்கு ஆண்டுதோறும் சிறப்புற நிகழ்த்தி, இவ்வாண்டு 25ஆவது மகா ருத்திராபிடேகத்தை வெள்ளிவிழா வாக அன்பர்கள் கொண்டாடுவது பெரிதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

பக்தியிலும், பண்பாட்டிலும் சிறந்த திருச்சிராப்பள்ளி அன்பர்கள், இறைவன் வழங்கிய செல்வத்தில் ஒரு பகுதியை அவனுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென்ற உணர்வோடு, கடந்த பல ஆண்டுகளில் பெரும் பொருள் வழங்கி, அருள்மிகு தாயுமானுரின் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணிகள் நிறைவித்துக் குடமுழுக்குச் செய்வித்து, எல்லாச் சிறப்புடன் நாள்வழிபாடும், சிறப்பு விழாக்களும் நடத்தி வருவது பாராட்டுக்குரியதாகும்.

## ருத்ராபிடேக வெள்ளி விழா :

இவ்வாண்டு மகாருத்ராபிடேகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளி விழா மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது. வெள்ளி விழா நினைவாக மகாருத்ராபிடேகக் கமிட்டியார், அன்பர்களின் பொருள் உதவியால், பெருஞ் செலவில், தாயுமானுர் வழிபாட்டிற்குரிய 'சோடசோபசாரச்' சாமான்கள் (ஈரெண்திறத்து உபசாரம்) செய்து வழங்கியுள்ளனர். திருச்சிராப்பள்ளிமக்களின் கொடைத்திறனும், மகாருத்ராபிடேகக் கமிட்டியினரின் பெருமுயற்சியும் பாராட்டத்தக்கன.

ருத்திர மந்திரம் ஜெபித்து, அபிடேகம் செய்து வழிபாடாற்றுவது நாட்டுமக்கள் பசியும், பிணியும் நீங்கி, வசியும் வளனும் பெற்று வாழ்வதற்காகவேயாகும். ருத்திர மந்திரம் மந்திரங்களுள் சிறந்ததொன்ருகும். ருத்திரன் என்ற சொல் 'சிவபரம்பொருளை' க் குறிப்பதாகக் கருதிச் சிலர் மயங்குவர். முத்தொழிற்கு உரியவர்களாய பிரம்மன், விஷ்ணு, ருத்திரர்களுள் ஒருவராகிய ருத்திரனை, சிவபெருமானுகக் கருதுவது அறியாமையேயாகும். தன்னிலையில் அசைவின்றிப் பிரம்மமாக விளங்கும் ஈசன் மூவராலும் அறியவொண்ணுதவன் என்பது நமது திருமுறைகள் உணர்த்துகின்ற உண்மையாகும்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினுர்;<br>
ஆறு கோடி நாரணர் அங்ஙனே;<br>
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்;<br>
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே, ( 5 - 100 - 3 )

என்னும் நாவரசர் வாக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. 'மூவராலும் அறிவொண்ணு முதலாய ஆனந்த மூர்த்தி' என்பர் மாணிக்கவாசகர். 'சதுர்த்தம் மன்யந்தே' என மூவருக்கும் அப்பால் நாலாமவனுகச் சிவபெருமான் நிலைகொண்டிருக்கிருன் என்கிறது வடமொழிச் சுலோகம் ஒன்று.

**பஞ்சாட்சர மரபுகள் :**

ருத்திர மந்திரத்தில் இடம் பெற்றுள்ள பஞ்சாட்சரத்தை எவ்வெவ்வாறு, எவ்வெழுத்தை முன் வைத்து ஓதவேண்டும்? அவ்வாறு ஓதுவதற்குரிய பயன் என்ன? பஞ்சாட்சரத்தில் இடம் பெற்றுள்ள ஒவ்வொர் எழுத்தும் எதனைச் சுட்டுகிறது? என்பனவற்றையெல்லாம் நமது சாத்திர தோத்திரங்கள் முறைப் பட விளக்குகின்றன. அவற்றையெல்லாம் அறிந்து கடைப் பிடித்தல் சைவர்களின் தலையாய கடமையாகும்.

**ஈரெண்திறத்து உபசாரம் :**

சோடசோபசாரச் சாமான்களை இங்கே ருத்ராபிடேகக் கமிட்டியினர் வழங்கியுள்ளனர். இச்சாமான்கள் இறைவனுக்குச் செய்யப்படும் பதினறு வகைப்பட்ட உபசாரங்களைச் செய்வதற் குரியனவாகும். ஆயினும், எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை ஓரிடத்தில் ஓர்பொருளில் நிறுத்தி வழிபடுவதற்கு மேற்கொள் ளும் முறைகளையே சோடசோபசாரம் என்பதுவழக்கு. இவற்றை முறையே,

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவாகனம் | — | அழைத்தல் |
| 2. | ஸ்தாபனம் | — | அமர்த்தல் |
| 3. | சந்நிதானம் | — | எதிர்முகப்படுத்துதல் |
| 4. | சந்நிரோதனம் | — | எதிருறவணங்கல் |
| 5. | பிரார்த்தனை | — | இருக்கவேண்டல் |
| 6. | அபிடேகம் | — | திருமஞ்சனம் |
| 7. | அலங்காரம் | — | ஒப்பனை |
| 8. | அங்கபூஜை | — | உறுப்பு வழிபாடு |
| 9. | நிவேதனம் | — | படைத்தல் |
| 10. | உபசாரம் | — | மிக்கூர்செயல் |
| 11. | அர்ச்சனை | — | போற்றிசெய்தல் |
| 12. | நமஸ்காரம் | — | வணக்கம் |
| 13. | பிரதட்சிணம் | — | வலம்செய்தல் |
| 14. | ஸ்தோத்திரம் | — | வாழ்த்து |
| 15. | தானம் | — | திருக்கொடை |
| 16. | பராங்முகம் | — | முகமாற்று |

என வழங்குவது வழக்கம். இப்பதினறனுள் ஒன்ருகிய உப சாரத்திற்குப் பயன்படும் தீப தூபக் கருவிகளே இன்று வழங்கப் பெற்ற சோடசோபசாரச் சாமான்களாகும்.

## தத்துவம் அறிதல் தலையாய கடன் :

இச்சோடசோபசாரச் சாமான்களை இறைவன் திருமுன்பில் உபசாரமாகக் காட்டும்போது எங்கே நின்றுகொண்டு காட்டுதல் வேண்டுமென்று ஆகமங்களில் வரையறுக்கப் பெற்றுள்ளது. இதனைக் கூர்ந்து நோக்கினால் ஒரு தத்துவம் புலப்படுகிறது.

திருக்கோயில்களில் இறைவன் கோயில் கொண்டு அருள் வழங்குமிடத்தைக் கருப்பக்கிரகம் அல்லது கருவறை என வழங்குவர். தமிழில் இதனைத் 'திருவுள் நாழிகை' எனவும் வழங்குவர். உடம்பில் கருவறைக்கு ஒருவழியேபோலத் திருக்கோயிற் கருவறைக்கும் வழி ஒன்றே. கருவறைச் சுவரில் ஓட்டையிடலோ, சாளரங்கள் அமைத்தலோ தத்துவத்திற்கு மாறானதாகும். எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைக் கருவறையில் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளச்செய்து வழிபடுகிறோம்.

திருக்கோயில்களில் கருவறையை அடுத்திருக்கும் பகுதி அர்த்தமண்டபம். இதனை இடை நாழிகை என்றும் வழங்குவர். அர்த்தம் என்ற சொற்குப் பாதி என்று இங்கே பொருள். கருவறை அளவில் பாதியாக அர்த்த மண்டபம் அமைதல் வேண்டுமென்பது ஆகம விதி. பழமையான திருக்கோயில்களில் அர்த்த மண்டபத்தின் இடப்புறத்தில் அம்மையின் திருவுரு ஒன்று இருக்கக்காணலாம். இவ்வம்மை போகசத்தி எனப்பெறுவாள். ஐயன் நாததத்துவமாகவும், அம்மை விந்து தத்துவமாகவும் கருதப் பெறுவர். அம்மை எழுந்தருளியிருக்கும் அர்த்த மண்டபத்தில் நின்றே சிவாசாரியார் சோடசோபசாரங்களைக் காட்டுதல் வேண்டும். இதனுடைய உண்மைத்தத்துவம், உலக நாயகியாகிய அம்மை உலகில் வாழும் உயிர்களின் நலன் கருதி உயிர்கள் அளிக்கும்கொடைகளைப்பெற்று அதனைசிவபெருமானுக்குச் சேர்ப்பிக்கும் உபசாரமேயாகும். இதனையே சிவாசாரியார் அர்த்தமண்டபத்திலிருந்து செய்வது குறிக்கிறது. இஃதறியாத சிலர் தத்துவம் உணராது, ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் இடையில் ஓர் இடைநிலையாளர் ஏன் என வினவுகின்றனர்.

உலகியலிலும், மனைவியர் - கணவனுக்கு உணவிடுவதும் உபசரிப்புச்செய்வதும், வழக்கமாய்த் திகழ்கிறது. கணவனை மனைவியே உண்பிக்க வேண்டும் என்பது மரபு. கணவன் தேவையுணரவும், தீமைபுகுதாமல் காக்கவும் வல்லவள் மனைவியேயாவாள். இதுபற்றியே இறைவன் ஆலகாலவிடம் உண்ட போது அன்னை அதனைத் திருமிடற்றில் தடுத்து நிறுத்தினாள் என்ற வரலாறு எழுந்துள்ளது.

வாழ்த்து :

அருள்மிகு. மட்டுவார்குழலம்மை உடனுறை அருள்மிகு. தாயுமானவரின் மகாருத்திராபிடேகத்தைத் தரிசித்தநீங்கள், ஒவ்வோர் நாளும், இங்கே வந்து வழிபாடு நிகழ்த்தவேண்டும். இயலாதவர்கள் வாரத்தில் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளிலோ அல்லது ஒருநாளோ தவறாது வருதல் வேண்டும். பக்தர்கள் வருகை மிகமிக கோயில் நிர்வாகிகளும் அலுவலர்களும் உற்சாகத்தோடு பணிபுரிவர். எனவே, தவறாது வழிபாடு நிகழ்த்துதல் மக்கள் அனைவரது கடனுமாகும்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இதனை இடையறாது நிகழ்த்திவரும் மகாருத்ராபிடேகக் கமிட்டியினருக்கும், இவர்கள் முயற்சிக்குப் பின்னணியாக இருந்து, ஆக்கமும் ஊக்கமும் நல்கும் அன்பர்களுக்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

# இந்திரா காந்தி

1. பிரதமரின் புரட்சித் திட்டங்கள் வெற்றிபெறப் [ பாடுபடுவோம்.

2. எல்லாக் கறுப்புப்பண தில்லுமுல்லுக்காரர்களுக்கும் [ கடுந்தண்டனை காத்திருக்கிறது.

3. நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு [ உன் பங்கைச் செய்.

4. வதந்தியைப் பரப்புவோர் நாட்டின் எதிரிகள்.

5. ஜனநாயகத்தைக் காப்பதற்கே இந்த நெருக்கடிநிலை.

6. நாட்டின் லட்சியம் நிறைவேற துரிதமாய்ப் பணிசெய்.

7. நாட்டுக்கு ஏற்படுத்தும் நஷ்டம் நம்மையே அழிக்கும்.

8. நாடு செழிக்க உற்பத்தியைப் பெருக்கு.

# நவராத்திரி விளக்கம்

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

— அபிராமி அந்தாதி.

நவராத்திரி என்பது வேனிற்காலமாகிய (வசந்தருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பதுநாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்காலமாகிய (சரத்ருது) புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். இந்த ஒன்பது நாட்களும் பரிபூர்ணமாயும், நித்யமாயும் ஆனால் நிர்குணமாயும் உள்ள சிவசக்தியை (பராசக்தியை) சகுணமாகப் பலவித சக்தி வடிவங்களில் வழிபடுவதற்கு மிகச் சிறந்த நாட்களாகும். இந்நாட்களில் தேவியைப் பூசிக்க வேண்டிய அவசியம் என்ன வெனில், வசந்தருது, சரத்ருதுவாகிய இரண்டு ருதுக்களும் யமனுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமாகஉள்ளவை. அவ்விரண்டினுள் வசந்த ருதுவில் வெப்ப மிகுதியால் அம்மை முதலிய நோய்களும், சரத்ருதுவில் தட்ப மிகுதியால் காலரா முதலிய நோய்களும், பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலைபெற உலக மாதாவாகிய உமா தேவியை விரதமிருந்து பூசித்தல் வேண்டுமென்க. புரட்டாசி மாதத்தில் நவராத்திரியைப் பத்து நாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும், தசரா என்றும் வழங்குவர். இஃது அன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூசித்தற்குரிய தினங்கள் மங்களவாரம், சுக்ரவாரம், சப்தமி, அஷ்டமி, நவமி, கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி, பிரதோஷம் முதலியனவாம். சர்வேசுவர னுடைய சக்தி, காளிதேவி வடிவில் தோன்றி, சிவத்வேஷியான தக்ஷனின் வேள்வியை அஷ்டமியன்று அழித்தமையால் அந் நாள் தேவியை வழிபடுவதற்கு மிகச்சிறந்த நாளாகக் கூறப் பட்டிருக்கிறது. தேவியை இராவண ஜயத்துக்காக வழிபட்ட இராமபிரானுக்கு அஷ்டமியன்றே காட்சியளித்ததாகத் தேவி மாகாத்மியத்தில் உள்ளது.

## விரதம் அனுட்டிக்கும் முறை :

அமாவாசையன்று ஒருவேளை உணவுடன் உபவாசம் இருந்து அடுத்த ஒன்பது நாட்களும் பால் பழம் முதலியன உண்டு மூன்று வேளையிலும் பூசித்தல் வேண்டும். தேவியைக் கும்பத்திலோ (குடம்) அல்லது பிம்பத்திலோ (உருவம்) மந்திரம், பாவனை முதலியவற்றால் விதிப்படி ஆவாகனம் செய்து 'இவ் விரதத்தை இயன்ற மட்டும் சிரத்தையுடன் மேற்கொள்கிறேன்' என்று சங்கற்பம் செய்து கொண்டு, நவராத்திரி பூஜையைத் தொடங்கவேண்டும். முதல் மூன்று நாள் தேவியை வீரங் கொடுக்கும் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாள் செல்வம் வழங்கும் இலக்குமியாகவும், அதற்கடுத்த மூன்று நாள் கல்வி அளிக்கும் சரஸ்வதியாகவும் பாவித்துப் பூசிக்கவேண்டும். பல மலர்களால் தேவியை அர்ச்சிப்பதுடன் செஞ்சந்தனம் தோய்ந்த வில்வத் தளிர்களால் அர்ச்சனை செய்வது தேவிக்கு மிகவும் பிரியமாகும். தனிகர்கள் செலவைப் பாராது முறைப்படி சண்டி ஹோமம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பாயஸத்தை நிவேதனம் செய்வதாலும் அதைக்கொண்டு ஹோமம் செய்வதாலும் அம்பிகையின் அருள் விசேஷமாக ஏற்படுகிறது.

## விரத பலன் :

தினந்தோறும், காலையில் நீராடி நித்திய கடன்களை முடித்துக்கொண்டு தேவியைப் பூசிப்பதுடன், ஒவ்வொரு நாளும் கன்னிப் பெண்களை (இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள) குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா தேவியின் அம்சமாகப் பாவித்துப் பூசித்து உணவு, உடை, அணிகலன் முதலியவற்றை இயன்றவரை கொடுத்துவரவேண்டுமென்று தேவிபாகவதம் முதலிய நூல்கள் கூறும். பத்தாவது நாளன்று விரதத்தைப் பூர்த்தி செய்து உணவுகொள்ளவேண்டும். இவ்விழாவினை ஆண்கள் பெண்கள் இருபாலாரும் மேற்கொள்ளவேண்டும். ஸ்ரீ இராமபிரான் இந்த நவராத்திரி விழா விரதமிருந்து சீதா பிராட்டியை இலங்கையிலிருந்து மீட்டு நலம் பல பெற்றார். இம்மையில் நல்லனவெல்லாம் கைகூடும். மறுமையில் இந்திராதி போகங்களும் கிடைக்கும். முடிவில், பேரின்ப வீடும் கிட்டும். முறையாக இவ்விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சவுந்தர்யலகரி, சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியவற்றைப் பாராயணம் செய்தும், செய்யக் கேட்டும் பயன் பெறலாம்.

# தேச நலத்திற்கு தேவி வழிபாடு

உலக நன்மைக்காகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு 5—10—75 முதல் 14—10—75 முடிய நவராத்திரி விழாவில் நாள்தோறும் காலை, மாலை சதசண்டி வேள்வியும், மாலையில் தேவிக்கு விசேஷ அலங்காரங்களுடன் நவசக்தி அர்ச்சனை மூலமாக லட்சார்ச்சனையும் நடைபெறும்.

பதினெண்கரத்துடன் கூடிய மகாலக்ஷ்மி அம்சமும், துர்க்காம்சமும் பொருந்திய ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டி வேள்வியும், வழிபாடும் செய்வதால் தனி மனிதர்களுக்கும், நாட்டிற்கும், உலகிற்கும் செல்வமும் வீரமும் பெருகி சுபிட்சம் உண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அன்பர்கள் பலரும் இவ் வழிபாடுகளில் பங்கு கொண்டு அம்பிகையின் அருள் நலம்பெறுவதற்குவாய்ப்பாகப் பின்வருமாறு காணிக்கை கட்டணங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| லட்சார்ச்சனை ஒன்றுக்கு | .... | ரூ. | 250—00 |
| சதசண்டி வேள்வி காலம் ஒன்றுக்கு | .... | ரூ. | 100—00 |
| நவசக்தி அர்ச்சனை ஒன்றுக்கு | .... | ரூ. | 50—00 |
| துர்க்கா சகஸ்ரநாம அர்ச்சனை ஒன்றுக்கு | .... | ரூ. | 10—00 |

அன்பர்கள் இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு காணிக்கைகள் செலுத்தியும், வந்திருந்து வழிபட்டும், நேரில் வர இயலாதவர்கள் தபால் மூலம் தங்கள் பெயர், நக்ஷத்திரங்களுடன் காணிக்கைகள் செலுத்தியும் அர்ச்சனை வழிபாட்டில் பங்கு கொண்டு தேவியின் திருவருள் நலம் பெற்று உய்வார்களாக. தொகை செலுத்தவேண்டிய முகவரி :—

மேலாளர்,

தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் 609001

தஞ்சாவூர் மாவட்டம்.


திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு

## 25 ஆவது சதசண்டியக்ஞம்

இராட்சச ஆண்டு புரட்டாசித் திங்கள்


| தமிழ் தேதி | இங்கிலீஷ் தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|---|
| 17 | 3-10-75 | வெள்ளி | காலை மணி 9 - க்கு கணபதி ஹோமம் |
| 18 | 4-10-75 | சனி | இரவு மணி 8-30 க்குமேல் 10-30 க்குள் ரிஷபலக்னத்தில் எஜமானு நுக்ஞை, தேவிஅனுக்ஞை, விக்னேச்வரபூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 19 | 5-10-75 | ஞாயிறு | மலரி 10 க்குமேல் 11 க்குள் கடஸ்தாபனம், சண்டியக்ஞ பூஜாரம்பம் |
| 21 | 7-10-75 | செவ்வாய் | இரவு ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் (தீபபூஜை) ஒன்பது குத்துவிளக்குகளில் நவதுர்க்கா ஆராதனை. |
| 24 | 10-10-75 | வெள்ளி | மாலை வில்வாபிமந்த்ரணம் (வில்வதருவில் மகாலக்ஷ்மி பூஜை) இரவு சதசண்டியக்ஞசாலையின் முன்பு தீபபூஜை. ஒன்பது குத்துவிளக்குகளில் நவதுர்க்கா பூஜை. |
| 25 | 11-10-75 | சனி | காலையில் நவபத்திகாக்ரஹணம் (அதாவது கதளீ, தாடிமம், தான்யம், ஹரித்ரா, மானி, கவி, வில்வம், ஜயந்தீ, அசோகம் என்ற தெய்வீகச்செடிகளில் ஒன்பது தேவசக்திகளைப் பூஜித்து வழிபடுதல். |
| 26 | 12-10-75 | ஞாயிறு | அஷ்டாதச ஆயுதமண்டல பூஜை. |
| 27 | 13-10-75 | திங்கள் | சரஸ்வதிபூஜை. காலை 10 - 30 க்குமேல் சோபனத்திரவிய சமர்ப்பணம். வசோத்தாரை, மஹாபூர்ணுகுதி தீபாராதனை. இரவு மண்டலபூஜை பலி. |
| 28 | 14-10-75 | செவ்வாய் | காலை சதசண்டியக்ஞ பூர்த்தி. மணி 8-15 க்குமேல் 10-15 க்குள் விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்காம்பிகைக்கு சதசண்டியக்ஞ கலச அபிஷேகம், தீபாராதனை. |

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயில்
மகாருத்திராபிடேக வெள்ளிவிழா !



27 – 7 – 75 ஞாயிறன்று நடைபெற்ற
ஸ்ரீ தாயுமானவரின் மகாருத்திராபிடேகத் தரிசனத்திற்கு
எழுந்தருளிய
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
இருபத்தைந்து ஆண்டுகளாக இப்பணியில் தொண்டாற்றிவரும்
மகாருத்திராபிடேகக் குழுவினர்களுக்குப் பட்டாடை போர்த்தி
திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் உடனிருக்க
அன்பர்களிடையே அருளாசி வழங்குதல்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான



ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகர் திருக்கோயிலும், பஞ்சாக்கர தீர்த்தமும்.

# திருப்பனந்தாள் அஜனீஸ்வரம்

வித்துவான், திரு. வே. மகாதேவன்

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று திருப்பனந்தாள். தஞ்சை மாவட்டக் குடந்தை வட்டச் சிற்றூர்களில் ஒன்று. இங்குத் திருத்தருமை யாதீனத்தின் அருளாட்சியில் இலங்கும் ஆலயங்கள் இரண்டுள. ஒன்று, பலரும் இன்று சென்று பரவும் பான்மை படைத்ததாய் நிலவும் செஞ்சடையப்பர் திருக்கோயில் "கண்பொலி நெற்றியினன்" எனத் தொடங்கும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகம்பெற்ற திருக்கோயில். முதலாதித்தன், முதற்பராந்தகன்காலத்தொன்மையுடைய திருக்கற்றளி. மற்றொன்று ஊருடையப்பர் கோயில்.

## அமைவிடம் :

திருப்பனந்தாளில்,மேலவெளிஎனப்படும் பகுதியில் ஊருடையப்பர்கோயில் அமைந்துள்ளது. மாரியம்மன் கோயிலுக்கு வடமேற்புறத்தில், குடந்தை செல்லும் சாலையோரமாகக் கோபுர மற்ற சிறுவாயில் உடையதாகக் காட்சிதரும் சிவாலயம் இது. இந்தத் திருக்கோயிலைத் திருஅஜனீஸ்வரம் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## அஜன் + ஈஸ்வரம் :

'அஜன்' வடமொழியில் அமைந்த தெய்வப்பெயர். அஜன் என்ற சொல் படைத்தல் தொழிலைப் புரிபவன் எனப் பொருள் தரும்; பிரமனைக் குறிக்கும். எல்லாம்வல்ல சிவன் ஈஸ்வரன். அவன் எழுந்தருளி இருக்கும் ஆலயங்கள் ஈச்வரம் எனப்படும். பிரமனால் (அஜனால்) வழிபடப்பெற்ற ஈச்வரம் – பிரமன் வழிபாடாற்றிய சிவாலயம் அஜனீஸ்வரம் ஆகும்.

## அஜன் பூஜித்தானா ?

ஊருடையப்பர்கோயில் அஜனீஸ்வரம் எனக் குறிக்கப்பெறும் செய்தியே அதனைப் பிரமனால் வழிபடப்பட்ட திருக்கோயிலாக முன்னோர் கருதியமையை உறுதிப்படுத்துவது. இதனைக் கூறும் புராணச் சான்றும் உண்டு.

திருப்பனந்தாளுக்கு தமிழ்ப் பாக்களால் ஆகியதும், ஸ்ரீமந் செஞ்டைவேதிய தேசிகரால் பாடப்பட்டதுமான புராணம் ஒன்று உண்டு. இப்புராணத்துள் 'பிரமார்ச்சனைச் சருக்கம்' இரண்டாவதாக அமைகிறது.

சத்ய உலகம் புரக்கும் சதுர்முகன் மாதவனிடம் சென்றான். கடவுளரிடை கருத்து வேறுபாடு முகிழ்த்தது. "இத்தலம் முழுவதும் படைப்பவன் நான்; என்னினும் நீ உயர்ந்தவனா?" என மலரவன் மொழிய நாரணனும் மலரவனோடு மாறுதல் கூறினான்; வெகுண்டுரைத்தான். சினம் மிக்கு இருவரும் தம்முள் மலைவராயினர். இருவரிடையே எரியுருவாய் இறைவன் தோன்றினான்.

அடுபோர் மலைந்தோர் இவ்வதிசயம் கண்டனர்; சிறிது அமைதிகொண்டனர். "ஆதியந்தமிலா அச்சோதியின்" அடிமுடி கண்டவர் உயர்ந்தவர் என ஒப்பினர். ஏனமாகி மால் அடிதேடினான். அன்னமாகி அயன் மேல் பறந்தான். திருமாலொடு நான்முகனும் தேடித் தேடரூணத் தேவனல்லவா சிவன்? திருமால் சளைத்தான்; திரும்பினான்.

பறந்து பறந்து சலித்துச் சிறகோய்ந்தான் படைத்தல் கடவுள். ஓய்ந்து நிற்குங்கால் ஒருதாழை வரக்கண்டான். "தாழாய்! மலரின் அரசே! அயன்முடிகண்டனன்! என்று அறிவிக்கவேண்டும்" என்று வேண்டினான் மலரவன். தாழம்பூ ஒப்பியது; ஒப்பந்தம் உருவாயிற்று; திரும்பினன்.

ஈறிலாச்சோதி இருவரையும் உசாவ, பிரமனின் கூற்றுப்படி தாழையும் தீப்பொய்ம்மொழி புகன்றது. சிவன் பெருஞ்சினம் உற்றான்.

"வேதா! படிறு ஓதினை! இன்று இதனுக்கு ஒப்பு ஆயதோர் பாதகம் இல்லை! உனக்கு உயர் ஆலயம் அற்றிட; அர்ச்சனையும் எப்போதும் இலாதுற நின்தொழிலும் இசையாது அகல" எனச் சபித்தான்.

வேதன் வேதனை யுற்று வேண்டினான். தாழை தாழ் துயர் உற்று இறைஞ்சியது. சாபவிமோசனம் தந்தான் சங்கரன். தாழைக்கும் விமோசனம் தந்தான். "பிரம! நீ பொய்க்கரியூட்டினை; தகாது; மறையவர் முறையில் சென்று உயர்சபரி கொள்க! ஆலயம் அன்னசத்திரம் ஆகுக! என்றுரைத்தருளினான்.

படைத்தல் தொழில் இழந்த பிரமன் பெருந்துயர் உற்றான். வைகுந்தம் அடைந்து, "பொய் புகன்றேன்; புரியும் தொழில்

இழந்தேன். என் படைப்பும் நைவும் போக்க அருள்" என வேண்டினன். நான்முகன் நாராயணனுடன் கயிலை நண்ணினன். சிவனை அடியற்றமரம்போல அடிவீழ்ந்து வணங்கினன். அவர் அருளின்படி தாலவனத்தில் தன் இன்னல் தீர வழிபடவந்தான்.

படைத்தல் கடவுள் பனசை எல்லையை நண்ணினன் ; சந்நிதியைக் குறுகினன் ; தேறு செஞ்சடைத்தேவனை நேர்கண்டு திளைத்தான். அன்பினால் இறைஞ்சினன். தண்டினால் தழைத்த நற்றடம் சதுரமாக்கண்டான். மந்திரங்களை ஓதி மகேசுவரனை வழிபட்டான். பல வகைகளில் ஆகம விதிப்படி பூசனைகள் ஆற்றினன். பனசைநாதர் எதிர்தோன்றித் திசைமுகனுக்கு அருள்செய்தார். சாபவிமோசனம் பெற்ற சதுர்முகன் வீதிகள் கோயிற்பகுதிகள் முதலியன அமைத்தான் எனத் திருப்பனந்தாள் தலபுராணம் கூறுகிறது. இதன்படி தாலவனேசுவரராகியதாடகைஈச்வரத்துச் செஞ்சடையப்பரே பிரமனால் வழிபடப்பெற்றவராகிறார்.

## வடமொழிப் புராணத்தில்........

வடமொழியில் திருப்பனந்தாள் தலமான்மியம் பிரும்மாண்ட புராணத்தில் உத்தரகாண்டத்துக் கூறப்பெற்றுள்ளது. "பிரும்மா தாலவனேசுவரரைப் பூசித்தார். அதேகாலத்தில் காட்டு யானையாக இருந்த ஐராவதமும் இவரைப் பூசித்தது. சமகாலத்தில் யானையும் பூசித்தலால் தன்னால் பூசிக்க இயலாது, தாலவனேசுவரரைத் தனியே அமைதியாக வழிபாடாற்றி வணங்க எண்ணினார். அதனால் யானை ஏறமுடியாத உயர்ந்த பகுதியில் கஜப்பிருஷ்ட விமானமுடையதாக ஒரு திருக்கோயிலை எடுப்பித்தார். இறைவனை எழுந்தருளுவித்துத் தான் தனித்திருந்து வழிபட்டார். இவ்விறைவர் அஜனால் வழிபடப்பட்டமையால் "அஜேஸ்வரர்" எனப்பெற்றார். இறைவி "திரிபுரசுந்தரி" எனக் கூறுகிறது எனத் தாடகைஈச்வரத்துச் சிவாசாரியர் கூறுவர். இவ்வடமொழிப் புராணக் குறிப்பு ஊருடையப்பர் திருக்கோயில் அஜனிஸ்வரம் என வழங்குதற்குரிய காரணம் காட்டுகிறது.

## தூங்கானைமாடக்கோயில் :

ஊருடையப்பர்கோயில் தூங்கானைமாடக்கோயிலாகும். மாடக்கோயில்கள் கட்டுமலைபோலச் செய்யப்பெற்ற உயர்ந்த மேடைப் பகுதியில் அமையும். தூங்கானைமாடக்கோயில் கலையமைப்பில், கர்பக்கிரகத்தின்மேல் அமையும் விமானத்தைப் பின்புறமிருந்து

நோக்கினல் யானை தூங்குவதுபோலக் காட்சிதரும். தூங்கானை மாடக்கோயில் விமானம், யானை (கஜம்) யின் பின்புறம் (பிருஷ்டம்) போன்ற வடிவுடைத்தாதலினல் கஜப்பிருஷ்ட விமானம் என்று கூறப்பெறும். உயர்ந்த மேடைப் பகுதியில், கஜப்பிருஷ்ட விமானமுடையதாகத் தூங்கானைமாடக்கோயில் பாணியில் எடுப்பிக்கப்பெற்றது ஊருடையப்பர் திருக்கோயில்.

'தூங்கானைமாடக்கோயில்கள் பல்லவர்காலத்தின் இறுதியில் தான் எழுப்பப்பெற்றன' என மேலைநாட்டுக் கலையியல் ஆசிரியர் கருதுவர். ஆனல் தேவாரத்திருப்பதிகங்கள் முற்பட்ட பல்லவர் காலத்தில் இருந்த பல மாடக்கோயில்களைக் குறிக்கின்றன. சமயமரபினை ஒட்டி, பெருக்காறுசடைக்கணிந்த பெருமானுக்குக் கோயில்கண்ட கொற்றவனுகக் குறிப்பிடப்பெறும் கோச்செங்கணுல் அமைந்த ஆலயங்களில் ஒன்ருக இதனைக் கொள்ளலாம். "எண்தோள் ஈசர்க்கு எழில்மாடம் எழுபதுசெய்து உலகாண்ட செங்கட்சோழர்" திருப்பணியாகக் கூறுதல் பொருத்தப்பாடுடையதாகும்;

## கோயிலின் அமைப்பும் சிற்பங்களும் :

ஊருடையப்பர் திருக்கோயில் கருவறை, கருவறை முன் மண்டபம் என்னும் இருபகுதிகளேவுடையது; இவ்வர்த்த மண்டபப் பகுதியில் பல உதிரிச் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள. ஸ்தானநிலையிலமைந்த விநாயகர், சந்திரன், நாற்கரத்துடன் அமைந்த செவ்வேள், சண்டீசப்பெம்மான், வைரவர் ஆகிய திருமேனிகள் இங்கமைந்துள்ளன.

கோயிற்காக அமைந்த உயர்ந்த மேடைப் பகுதியில் மூலவர் ஆலயத்துக்குத் தென்கீழ்மூலையில் அர்த்தமண்டபமுடைய கருவறையுடைத்தாய்ச் சிறு விமானத்துடன் சிற்ருலயம் அமைந்துள்ளது. இவ்வம்மை 'திரிபுரசுந்தரி' எனப்பெறுகிருள்.

## அஜனிச்வரத்துக் கல்வெட்டுக்கள் :

ஊருடையப்பர் கோயிலில் நுழைவு வாயிலின் அருகால் அமைந்த இரண்டு கருங்கற்களில் கல்வெட்டுக்கள் காணப் பெறுகின்றன. இன்று மிகச் சிதைந்த நிலையில் காணப்பெறுவன. மூன்று கல்வெட்டுக்கள் இங்குள. இவற்றில், 'திருவஜனீஸ்வரம் உடையார்', 'திருவயனீச்வரம் உடையார்' என்றெல்லாம் அஜேஸ்வரர் கூறப்பெறுகிருர்.

(தொடரும்)

# நந்திக் கதம்பம்.

"நஜன்"

( மலர் 34, இதழ் 9, பக்கம் 408 இன் தொடர்ச்சி )

**தமிழ் நாட்டில் நந்திகள் :**

தமிழ்நாட்டிலுள்ள நந்திகளைப்பற்றி நினைக்கும் போது நமது நினைவுக்குவருவது தஞ்சை பெரியகோவில்பிருஹதீஸ்வரர் ஆலய நந்திதான். இதற்குப் போட்டிபோடும்படியான நந்தி தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை என்றாலும் சுதையாலான நந்திகள் பல கோவில்களில் இடம் பெற்றுள்ளன.

கங்கைகொண்ட சோழபுரம், ராமேஸ்வரம், திருவிடை மருதூர், திருவாவடுதுறை, சிதம்பரம் ஆகிய கோவில்களின் நந்திகள் ஆகிருதியில் பெரியவை.

தஞ்சையைப்பற்றிய வரை கோவில் பெரியது, கோபுரம் பெரியது, இலிங்க மூர்த்தியும் பெரியவர், நந்தியும் பெரியது.

இந்த நந்தி ஒரே கல்லால் ஆனது. இதன் உயரம் 12 அடி நீளம் 19½ அடி. அகலம் 8¼ அடி. இதன் எடை 25 டன்கள். பெரம்பலூருக்கு அருகிலுள்ள பச்சை மலைப் பகுதியிலிருந்து இதற்காக கல் கொண்டு வரப்பட்டதென்று கூறப்படுகிறது. இந்த நந்தி இருக்கும் மண்டபம் நாயக்க மன்னர் ஒருவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நந்திபற்றி ஒருவிசேஷம்; மழை பெய்யவில்லை என்றால் முன்காலத்தில் இந்த நந்திக்கு மிளகு அபிஷேகம் செய்து பூஜை நிவேதனங்கள் செய்தால் நிச்சயமாக மழைபெய்யுமாம். அப்படி மழை பெய்வதற்காக சரபோஜிமன்னன்காலத்தில் ( கி.பி. 1827ல்) இக்கோவில் நந்திக்கு அபிஷேகம் பூஜை நிவேதனம் செய்ய நாளொன்றுக்கு 3½ சக்கரம் கொடுக்கப்பட்டதாக தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள சுவடியில் காணப்படுகிறது.

கி. பி. 1775ல் இந்த நந்திக்கு மூன்று நாட்கள் செய்த மிளகு அபிஷேக செலவு 21 சக்கரம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

இதே போல திருவாரூரிலும் மழை பெய்விக்கும் சக்தியுள்ள நந்தி இருக்கிறார். இங்கு கிழக்கு கோபுரவாசல் வழியாக உள் நுழைந்ததும் காணப்படுபவர் பிரும்ம நந்தி. மழை வரண்ட காலத்தில் இவரைச் சுற்றி நீர் நிரப்பிவைத்தால் மழை பெய்யும் என்றவழக்கு இருந்துவந்துள்ளது. விதிவிடங்கருக்குமுன்புள்ள நந்திகேசுவரர்தான் நின்ற நிலையில் காணப்படுகிறார்.

மழை இல்லாத இச் சமயத்தில் தஞ்சை, திருவாரூர் நந்திகளுக்கு முறையே மிளகு அபிஷேகமும் நீர்நிரப்புதலும் செய்து பார்த்தார்களா என்று தெரியவில்லை.

திருக்கள்ளம் என்ற ஊருக்கு நந்திக்கிராமம் என்றபெயரும் உண்டு. இங்கு தினசரி பிரதோஷ தரிசனம் மிக விசேஷம்.

சென்னைக் கருகிலுள்ள ஆதம்பாக்கம் என்ற கிராமத்தில் உள்ள நந்தீஸ்வரர் ஆலயம் பிருங்கி முனிவருடன் சம்பந்தப் பட்டது. இது நந்தி வழிபட்ட தலம். நாகலிங்க மரம் தல விருட்சம்.

சில ஆண்டுகள் வரை ஈசுவரரை நந்தி காணமுடியாதபடி ஒரு குறுக்குச்சுவர் இருந்துவந்தது. இப்போது அச்சுவரில் துவாரம் செய்யப்பட்டு நந்தி இறைவனை தரிசிக்கும்படி செய்யப் பட்டுள்ளது.

பல தமிழ்நாட்டுக் கோவில்களில் இறைவன்மீது சூரிய கிரணம் காலையிலோ மாலையிலோ சில குறிப்பிட்ட நாட்களில் விழும்படி சந்நிதி அமைந்திருக்கும். அத்தகைய ஆலயங்களில் தாரமங்கலம் (சேலம் மாவட்டம்) கைலாசநாதர் சந்நிதி ஒன்று: இங்கு குறிப்பிட்ட தினத்தில் மாலையில் சூரிய கிரணம் நந்தியின் இரு கொம்புகளுக்கிடையே பாய்ந்து இறைவன்மீது படுகிறது.

## வாயில்புறம் பார்க்கும் நந்திகள்:

சில ஆலயங்களில் நந்தி இறைவனைப் பார்க்காமல் ஆலய வாயில் நோக்கி காணப்படுகின்றன. இவ்வகை நந்திகளில் மிகப்பெரியது நஞ்சன்கூடு என்ற இடத்திலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் ஆலய நந்தி. இவருக்கு அலங்கார நந்தி என்று பெயர். பெயருக்கேற்ப அலங்காரமுள்ளவரே. சந்நிதியை மறைக்காமல் நன்கு தள்ளியே இவர் வாயில் நோக்கி யிருக்கிறார்.

திருவலம், சென்னை - பங்களூர் ரோடில் சென்னையிலிருந்து 75மைலிலுள்ளது. இத்தலத்தில் விடை இறைவனுக்கு தன் பின் பக்கத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

கஞ்சாரன் என்ற அசுரனை இறைவன் ஆணையால் நந்தி தேவர் துரத்திச்சென்று திரும்பாமலேயே அப்படியே இருந்து விட்டதாகக் கூறப்படுகிறது. வடதிருமுல்லைவாயிலிலும் நந்தி அப்படியேயுள்ளது. பசுவான உயிர்கள் என்றுமே இறைவனை விட்டு ஒடவே செய்கின்றன. ஆனால் இறைவன் அவ்வுயிர் களுக்கு அருள்புரிய அவ்வுயிர்களைத் துரத்திக்கொண்டே ஒடி வருகிறார். இது இறைவனின் கருணையை விளக்கும் ஒரு தத்துவம். திருவைகாவூரிலும் இப்படியே நந்தி உள்ளது.

## நந்தி விலகிய சந்நிதிகள் :

நந்தனுருக்காகத் திருப்புன்கூரில் நந்தி விலகிய வரலாறு எல்லோருக்கும் தெரிந்திருக்கும். கோபாலகிருஷ்ணபாரதியாரின் 'வழிமறைத்திருக்கிறதே' பாடல் மிகப்பிரபலமானது.

திருப்பூந்துருத்தியிலும் நந்தி விலகியுள்ளது. இது அப்பர் கைத்தொண்டு செய்தஸ்தலம். ஆகவேஞானசம்பந்தர், கோயிலில் அவர் கைப்பட்ட இடத்தில் கால்வைக்க அஞ்சி கோயில் வாசலி லேயே நின்று தரிசனம்செய்ய விரும்பினர். அதற்காக நந்தியை இறைவன் விலகச்சொன்னராம். பட்டீசுவரத்திலும் நந்தி விலகியே காணப்படுகிறது. திருமழபாடியில்தான் சந்நிதிக்குநேரே நந்தி இல்லை. அதிகார நந்தி நின்றநிலையில் இருக்கிறார். திருக் கண்டியூர் நந்தியின் பார்வை மிக அழகாக அமைந்திருக்கிறது.

## சாய்ந்த நந்தி :

மதுரைக்குக் கிழக்கே 12 மைலிலுள்ள திருப்பூவணத் தில் நந்தி சிறிது சாய்ந்திருக்கிறது. ஞானசம்பந்தர் இத்தலத் திற்கு வந்தபோது இங்குள்ள மணலெல்லாம் சிவலிங்கமாகக் காட்சியளித்திருக்கிறது. ஆதலால் அவர் அக்கரையிலிருந்தே பாடியிருக்கிறார். அவருக்குத் தரிசனம் அளிக்கவே இறைவன் நந்தியைச் சிறிது சாய்ந்துகொள்ளச் சொல்லியிருக்கிறார்.

சுசீந்திரம் நந்தி பற்றிய ஒரு கர்ணபரம்பரை வரலாறு கூறுவதாவது :- தாணுமாலயன் சந்நிதி நோக்கி பெரும் விடை உள்ளது. இது பன்னிரண்டு அடி உயரம். சந்தாசாகிப் இங்கு வந்து இங்குள்ள சிலைகளை எல்லாம் பங்கப்படுத்தியபோது

இந்த நந்தி அவன் கொடுத்த வைக்கோலைத்தின்று சாணம் போட்டது என்றும், அதன்பின்னரே அவன் சிலைகளை உடைப்பதை நிறுத்தினன் என்றும் கூறப்படுகிறது. சுதையாலான இந்த நந்தியும் பெரிய உரு.

மாயூரம் வள்ளலார்கோயிலுள்ள ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்தி நந்திமீது அமர்ந்து காணப்படுகிருர். இறைவனையே தாங்கும் பெருமை குறித்து நந்திதேவர் பெருமைபட்டுக்கொண்டதாகவும் அந்தச் செருக்கை அடக்கி சிவபெருமான் ஞானுேபதேசம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

## நீர் வடிக்கும் நந்தி :

பாலாற்றின்கரையில் தக்கோலம் என்று ஒரு ஊர். அங்கு கங்காதரேசுவரர் கோயில்கொண்டிருக்கிருர். இங்குள்ள ஒரு நந்திவாயின் வழியாக சதா தண்ணீர், சமீபகாலம்வரை வடிந்துகொண்டே இருந்தது. இதனுலேயே இத்தலத்திற்கு திரு ஊறல் என்ற பெயரும் ஏற்பட்டது.

இவ்வட்டாரத்தில் எண்ணிறந்த பம்புசெட்டுகள் அமைத்து மின்விசை உதவியால் தண்ணீர் இறைக்கப்படவே நந்திவாய் மூலம் வரும் தண்ணீர் நின்றுவிட்டது.

நந்தி தலமான திருவாவடுதுறையில் தருமதேவதை இறைவனை வழிபட்டு அவர் வாகனமாக இருக்கும் உரிமையைப் பெற்ருர். நந்தியேயில்லாத சிவன்கோயிலும்உள்ளது. அதுதான் திருப்பெருந்துறையில் ( ஆவுடையார்கோயில் ) மாணிக்கவாசகர் கட்டிய ஆலயம். இங்கு அருபமாகவே இறைவன் விளங்குகிருர். மற்றசிவாலயங்களிலுள்ளதுபோல இங்கு நந்தி, துவஜஸ்தம்பம் சண்டிகேசுவரர் கிடையாது. நந்திதேவரேதான் மாணிக்கவாசகராக அவதரித்தார் என்றும் கூறப்படுவதுண்டு.

ஆஞ்சநேயரும் நந்திபகவான் அவதாரமே என்று கூறுபவரும் உண்டு. இராவணன் தன் சபையில் அனுமாரைப்பார்த்தபோது இவனை எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்று தன் மூளையைக் குழப்பிக்கொண்டானும். கைலாயம் சென்றிருந்தபோது நந்திகேசுவரரைப்பார்த்தது இவன் நினைவில் வந்ததாம். சிவபெருமானிடம் என்றும் எப்போதும் பக்தி செலுத்துபவரும் என்றும் சிவத்தியானத்தில் ஆழ்ந்திருப்பவருமான நந்தியம்பெருமானின் பின்பக்கத்தைத்தொட்டு ( ஆலயங்களில் விடைபெறுவதுபோல ) கண்ணில் ஒற்றிக்கொண்டு இக்கட்டுரைத் தொடரை முடிக்கிறேன்.

சுபம்.

# விநாயகரின் 32 திருநாமங்கள்

திரு. என். இராமகிருஷ்ணு

நம்நாட்டில் எந்தக்காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்காமல் தொடர்வதில்லை. பிள்ளையார்சுழி போடாமல் நாம் கடிதம் கூட எழுதமாட்டோம். நாம் மேற்கொண்ட காரியங்களை எளிதாக, இன்பமாக முடிக்கவேண்டுமானால் பிள்ளையாரின் அருள்வேண்டும். பிள்ளையார் எங்கும், எதிலும் கலந்துள்ளார். பிள்ளையாரை நினைத்தால் நம் ஆசை நிறைவேறும் என்பது யாவரும் அறிந்ததே: எந்தக் காரியத்தை எடுத்தாலும் "பிள்ளையார்சுழி போட்டாயிற்று" என்று கூறுகின்றோம். பிரவணத்தின் திரிந்த வடிவம் பிள்ளையார்சுழி.

விநாயகப் பெருமானுக்குப் பல திருநாமங்கள் உள்ளன. அவை அவருடையகருணை, வீரம், தோற்றம் முதலாகிய வரலாறுகளைப்பற்றி வந்த பெயர்களாகும்.

பிள்ளையாரின் உருவம் முப்பத்திரண்டாகப் போற்றப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | பால கணபதி | (துதிக்கையில் மோதகம் விளங்கும்) |
| 2. | தருண கணபதி | (சிவந்த திருமேனி படைத்தவர்) |
| 3 | பக்தி கணபதி | (வெண்ணிறம் படைத்தவர்) |
| 4. | வீர கணபதி | (16 கரங்கள், சிவந்தமேனி, சினந்த திருமுகம்) |
| 5 | சக்தி கணபதி | (அபயஹஸ்தம் உள்ளவர்) |
| 6. | துவிஜ கணபதி | (4 யானை முகம் உடையவர்) |
| 7. | சித்தி கணபதி | (பொன்கலந்த பசுமை நிறம்) |
| 8. | உச்சிஷ்ட்ட கணபதி | (நீலத் திருமேனி) |
| 9. | விக்கின கணபதி | (ஆபரணம்அணிந்த திருமேனி) |
| 10. | க்ஷிப்ர கணபதி | (அங்குசம் ஏந்திய செந்நிறம்) |

| | | |
|---|---|---|
| 11. | ஏரம்ப கணபதி | (சிம்ம வாகனம் 5 முகம், பசுமை கலந்த கருமை நிறம்) |
| 12. | லட்சுமி கணபதி | (வெண்மை நிறத்தோடு நீலத் தாமரையை ஏந்திய இருதேவி களுடன் உள்ளவர்) |
| 13. | மஹா கணபதி | (செங்கதிர் போன்ற நிறம்) |
| 14. | விஜய கணபதி | (பெருச்சாளி வாகனம்) |
| 15. | நிருத்த கணபதி | (கூத்தாடும் பிள்ளையார்; கற்பக விருட்சத்தின் அடியில்) |
| 16. | ஊர்த்துவ கணபதி | (நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு வில், பாணம், தந்தம் இவற்றை உடையவர்) |
| 17. | ஏகாட்சர கணபதி | (பத்மாசனத்தில் உடையவர்) |
| 18. | வர கணபதி | (தேன்வண்ணமானவர்) |
| 19. | திரயக்ஷர கணபதி | (மாம்பழம் தாங்கியவர்; துதிக் கையில் மோதகம்) |
| 20. | க்ஷிப்ரபிரசாத கணபதி | (பேழை வயிற்றை உடையவர்) |
| 21. | ஹரித்ரா கணபதி | (மஞ்சள் நிறம்) |
| 22. | சிருஷ்டி கணபதி | (சிவந்த திருமேனி; பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் கரங்களில் உள்ளவர்) |
| 23. | ஏகதந்த கணபதி | (பேழை வயிறு, நீல நிறம்) |
| 24. | உத்தண்ட கணபதி | (10 கைகள், தாமரை ஏந்திய மேனி) |
| 25. | ரணமோசன கணபதி | (நாவற்பழம் வெண்பளிங்கு மேனி, சிவப்பு பட்டாடை) |
| 26. | துண்டி கணபதி | (அக்ஷமாலை, கோடரி ஏந்தியவர்) |
| 27. | துவிமுக கணபதி | (ரத்தின கிரீடம், இருமுகம்) |
| 28. | மும்முக கணபதி | (பூவரம்பூபோன்றசிவந்தநிறம்) |
| 29. | சிங்க கணபதி | (வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலதுகையில் உடையவர்; சிங்க வாகனம்) |
| 30. | யோக கணபதி | (இந்திர நீல ஆடை, இளம் சூரியன் நிறம்) |

31. துர்க்கா கணபதி (ஏட்டுக்கை, பெரியமேனி, சுட்ட பசும் பொன் நிறம்)

32. சங்கடஹர கணபதி (இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர்; செந்தாமரை பீடம்; நீல ஆடை)

விநாயகசதுர்த்தியின்போது விநாயகப்பெருமானின் இந்த முப்பத்திரண்டு திருநாமங்களை தியானம் செய்து உருவங்களை மனத்தில் நினைத்தால் சகலவிதமான சௌபாக்கியமும் ஏற்படும்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Thirubuvanam.

A hoary temple with rich arsheological & historical background, a temple so well kept that's Sarabesvara temple. I had the honour of offering worship with courtesy all around. One of the examples of best maintenance.

(Sd) SUKAVANESHVAR,
Dy Secratary of Govt. of T. Nadu.
Fin. Dept., Madras.

26—7—75.

* * * *

I was deeply impresed with the care with which the temple is maintained and the touching hospitality with which were trated.

(Sd) R. SRIRAM I. A. S.
Asst. Collector,
Kumbakonam.

26—7—75.

# ஆச்சாள்புரத் தல வரலாறு

வேதநெறி தழைத்தோங்கவும் சைவத்துறை விளக்கம் பெறவும் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தர் தமிழ் நாடு முழுவதும் சென்று புறச் சமய இருள் போக்கி, திருநீற்றொளி பரப்பி மணத்திருக்கோலங்கொண்டு தன் ஊர் சார்ந்திருந்த அடியவர்கள் அனைவருக்கும் சிவலோகம் வழங்குவித்துத் தாமும் சிவசோதியில் கலந்தருளிய திருத் தலம் ஆச்சாள்புரம்.

## தலப் பெயர் :

தஞ்சை மாவட்டம் சீகாழி வட்டத்தில் கொள்ளிடம் புகைவண்டி நிலையத்திற்குக்கிழக்கே மூன்றுகல் தொலைவில் விளங்கும் இத்தலம் சிவலோகபுரம், நல்லூர், திருமணவை முத்திபுரம் என்ற மறுபெயர்களை உடையது. திருஞான சம்பந்தர் தேவாரத்தில் 'நல்லூர்ப் பெருமணம்' என இத் தலப் பெயர் குறிக்கப்பெறுகிறது.

ஆச்சாள்புரம் என்பது திருவெண்ணீற்றுமையம்மை சம்பந்தர் திருமணத்துக்கு வந்திருந்தோர் எல்லோர்க்கும் திருவெண்ணீறளித்துச் சிவசோதியுட் கலக்கச் செய்த காரணத்தால்வந்த பெயர். ஆச்சாள், ஆயாள் – என்பன அம்மையின் பெயர்கள்.

## மூர்த்திகள் :

இறைவன் திருநாமம் சிவலோகத்தியாகர். இறைவி யின் திருநாமம் திருவெண்ணீற்றுமையம்மை. நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் ஸ்தோத்திர பூரணம்பிகையோடு மணக்கோலத்தில் எழுந்தருளி விளங் கும் தனிக்கோயில் உள்ளது. ஞானசம்பந்தர் திருமணம் கொள்வதோடு அவர் இறைவன்மீது பாடிய தோத்திரங்கள் நிறைவுற்றமையால் அவர்தம் துணைவியார் ஸ்தோத்திர பூரணி எனப் பெயர்பெற்றார். கல்வெட்டுக்களில் சொக் கியார் என வழங்கப்பெறுகிறது. சொக்கு - அழகு.

## புராண வரலாறு :

இத்தலத்தில் வசிட்டர், பராசரர், பிருகு, ஜமதக்கினி முதலிய முனிவர்களுக்கு இறைவன் கயிலைக் காட்சி காட்டி யருளினான். முருகனுக்குச் சிவபெருமான் சிவலோகம் அளிக்கும் தலம் இதுவே என அருளிச்செய்தார்.

திருமால் இத்தலத்திறைவனை வழிபட்டு அவுணர்களை வெல்லும் வரம் பெற்றார். நான்முகன் படைத்தல் தொழில் கைவரப்பெற்றான். இந்திரன் போகம் பெற்றான். சந்திரன் அபயம் பெற்றான். வசிட்டர் அறிவுரைப்படி மன்னன் மாந்தாதா வழிபட்டு அருள் பெற்றான்.

காக முனிவர் இத்தலத்தைக் காலால் மிதித்தற்கு அஞ்சித் தலையால்நடந்துவந்து நிருதிதிசையில்சிவயோகத் தமர்ந்து தவமியற்றினார். திருஞானசம்பந்தர் திருமணக் காலத்தில் தாமும் முத்தியெய்தினார். சோழ மன்னனைக் கொண்டு இம்முனிவர் இத்தலக் கோயிலைக் கட்டுவித்தார்.

கங்கை தவஞ்செய்து இங்குள்ள வாவியில் எழுந்து இறைவனை வழிபட்டாள். பெருமான் கார்த்திகைஞாயிறு தோறும் வந்துவழிபட்டு நலம்பெறுமாறு அருள்செய்தான்.

## திருஞானசம்பந்தர் திருமணம் :

சிவபாத இருதயர் திருஞானசம்பந்தரை அணுகி மறை முறைப்படி வேள்விகள் பல செய்தற்கு ஒரு கன்னியை மணம் புரிந்தருளவேண்டுமென வேண்டினார். மறையவர் பலரும் அவ்வாறே ஞானசம்பந்தரை வேண்டினர். ஞானசம்பந்தர் முதலில் மறுத்துப் பின் திருவருளை நினைந்து உடன்பட்டார். சிவபாத இருதயர் திருநல்லூர் என்னும் இத்தலத்து நம்பாண்டார்நம்பியின் மகளாரை மணம் பேசினார். திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. ஞானசம்பந்தர் இத்தலத்துக்கு எழுந்தருளி இறைவனை வழிபட்டு மணக்கோலம் புனைந்தார். திருநீலநக்க நாயனார் மணவிழாச் சடங்குகளை நிகழ்த்தினார். தீ வலம் வரும் சடங்கு நிகழும் வேளையில் ஞானசம்பந்தர் 'இருவினைக்கு வித்தாகிய இல்வாழ்க்கை நம்மைச் சூழ்ந்ததே! இனி இவளோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வேன்' என்று கூறித் திருப்பெருமணக்கோயிலை அடைந்து 'கல்லூர்ப் பெருமணம்' என்று தொடங்கும் பதிகம்பாடித் திருவடியிற் சேரும் நினைவோடு இறைவனை வழிபட்டார். அப்போது இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றி 'நீயும் நின்மனை வியும் திருமணம்காண வந்தோர் அனைவரும் இச்சோதியுட் புகுமின்' என்றருள்செய்தான். ஞானசம்பந்தர் 'காதலாகி' எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம்பாடி அனை வருக்கும் சிவலோகம் வழங்குவித்துத் தாமும் தம் துணை வியாரொடு சிவசோதியிற் கலந்தருளினார். ஆண்டுதோறும் வைகாசிமூல விழாவில் இக்காட்சி திருவிழாவாக நிகழ்கிறது.

**தீர்த்தம் :**

இறைவனுடைய சூலப்படையால் கோயிலுக்கு முன்னுல் தோற்றுவிக்கப்பெற்றதுபஞ்சாக்கரதீர்த்தம். பிருகு தீர்த்தம் முதலியபலதீர்த்தங்களும் உள்ளன. தலவிருட்சம் – மாமரம்.

**நூல்கள் :**

ஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்று உள்ளது. 'காதலாகி' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகமும் இத் தலத்தில் அருளிச் செய்யப்பெற்றதேயாகும். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய தலபுராணமும், மகாவித்துவான். மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத் தமிழும் உள்ளன.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலத்தில் 19 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் காலக் கல்வெட்டு 15, பாண்டியர்காலக் கல்வெட்டு 3, தஞ்சை மகாராஷ்ட்ர மன்னன் 1, இவற்றுள் திருக் கோயிலைப் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வூர் கொள்ளிடத்தின் வடகரை இராசாதிராசவளநாட்டு வெண்ணியூர்நாட்டு பஞ்சவன்மாதேவியான குலோத்துங்கசோழ சதுர்வேதிமங்கலத்தைச் சார்ந்தது எனக் கூறப்படுகிறது. இறைவன் திருப்பெருமணமுடைய மகாதேவர் எனக் குறிப்பிடப்படுகிருர். மற்றும், ஆளுடைய பிள்ளையார், சொக்கியார், ஸ்ரீகயிலாசமுடையார் முதலிய மூர்த்திகளின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

சோழமன்னர்களில் விக்ரமசோழன் (கி. பி. 1117–1134) இராஜராஜன் II (கி. பி. 1144) இராசாதிராசன் II (கி. பி. 1165) குலோத்துங்கன் III (கி. பி. 1178–1218) ஆகியோரும் பாண்டியர்களில் மாறவர்மன், பராக்கிரமன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251–1268) ஆகியோரும் தஞ்சை மகாராஷ்ட்ரமன்னர் ஏகோஜி மகாராஜாவும் (கி. பி. 1683) இத்திருக்கோயிலில் கொண்டிருந்த ஈடுபாட்டை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

---

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆவணிமாத ஜன்மநக்ஷத்திர நாளை (4—9—75) முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

# தேவார வைப்புத் தலங்கள்

## திருஞானசம்பந்தர்

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 அத்தங்குடி | (2-39-10) | விளங்கவில்லை |
| 2 அத்தி | (2-39-2) | ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து கேரளாந்தகநல்லூர் - தெ. இ. க. 229-1912 |
| 3 அறப்பள்ளி | (2-39-4) | "கொல்லி குளிரறைப்பள்ளி" - விளக்கமில்லை |
| 4 ஆறை | (2-39-5) | 'ஆற்றூர்' என்பதன் மருவிய வடிவம் |
| 5 இடைப்பள்ளி | (2-39-4) | விளங்கவில்லை |
| 6 உஞ்சேனைமாகாளம் | (2-39-9) | உச்சயினி – வடநாட்டுத்தலம் |
| 7 காட்டூர் | (2-39-7) | திருவாரூர் - குடந்தைப்பெருந் துப் பாதையில் உள்ளது |
| 8 காற்றூர் | (2-39-8) | விளங்கவில்லை |
| 9 திருக்குணவாயில் | (2-39-7) | குணவாயிற்கோட்டம் - சேர நாட்டுத்தலம். கொடுங்கோளூருக்கு மேற்புறத்தில் உள்ளது |
| 10 குத்தங்குடி | (2-39-10) | தேரழுந்தூருக்கு அருகில் உள்ளது |
| 11 குருந்தங்குடி | (2-39-10) | விளங்கவில்லை |
| 12 குன்றியூர் | (2-39-1) | மன்னார்குடி அருகிலுள்ள 'குன்னியூர்' ஆகலாம் |
| 13 கூரூர் | (2-39-1) | 'திருநறையூர் நாட்டுக் கூரூர்' என்பது கல்வெட்டு |
| 14 கொடுங்கோவலூர் | (2-39-7) | 'திருக்கோவலூர்' என்னும் வீரட்டத்தலம் |
| 15 கோணம் | (2-30-2) | திருக்கோணமலையாக இருக்கலாம் |
| 16 கோழி | (2-120-4,5) | சோழநாட்டுத்தலைநகரமாகிய 'உறையூர்' |

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 17 சிறப்பள்ளி | (2-39-4) | விளங்கவில்லை |
| 18 திருவண்குடி | (2-39-10) | ,, |
| 19 தென்கோடி | (2-39-1) | கோடிக்கரை அல்லது தனுஷ் கோடி |
| 20 தேவன்குடி | (2-39-10) | 'திருந்துதேவன்குடி' என்ற பாடல் பெற்ற தலமாக இருக்கக்கூடும் |
| 21 தேனூர் | (1-61-9) | திருச்சிக்கு அருகில் உள்ள ஓர் சிற்றூர். ஐங்குறுநூறு (55-57) பாண்டி நாட்டுத் தலமாகக் குறிக்கிறது |
| 22 திருநற்குன்றம் | (2-39-9) | விளங்கவில்லை |
| 23 நெடுவாயில் | (2-39-9) | ,, |
| 24 நெற்குன்றம் | (2-39-9) | திருச்சி மாவட்டம், முசிரி வட்டம் 'தின்னகோணம்' என்னும் ஊர் (தெ. இ. க. 249,57) |
| 25 பூந்துறை | (3-92-8) | திருநெல்வேலிமாவட்ட-சிந்து பூந்துறை |
| 26 பூழியூர் | (2-39-8) | பூழி நாட்டில் தலைநகராகலாம் |
| 27 பேரூர் | (2-39-1) | நொய்யலாற்றின் கரையில் உள்ள காஞ்சிவாய்ப்பேரூர் |
| 28 பொதியின்மலை | (1-50-10) | பாபநாசம் (நெல்லைமாவட்டம்) |
| 29 போற்றூர் | (2-39-8) | ஓர் அடைமொழியா அல்லது தலமா என விளங்கவில்லை |
| 30 மத்தங்குடி | (2-39-10) | விளங்கவில்லை |
| 31 மாட்டூர் | (2-39-7) | மாயூரத்திற்கு அருகில் உள்ள 'சேவூர்' |
| 32 வஞ்சி | (2-39-1) | மாகோதை |
| 33 வடமாகறல் | (2-39-1) | பாடல் பெற்ற 'திருமாகறல்' தலமாகலாம் |
| 34 வரந்தை | (1-61-3) | விளங்கவில்லை |
| 35 வழுவூர் | (3-71-2) | மாயூரத்தின் அருகிலுள்ள 'வழுவூர் வீரட்டம்' |

| தலம் | பக்க எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 36 வாதவூர் | (2-38-7) | பாண்டியநாட்டு - 'திருவாதவூர்' |
| 37 வாரணாசி | (2-39-7) | காசி (வட நாட்டுத்தலம்) |
| 38 வெற்றியூர் | (2-39-6) | பாண்டி நாட்டுத் திருவாடனையிலிருந்து எட்டுக் கல்லில் உளது. தற்காலத்தில் ஜயபுரி என வழங்குகிறது. |

எண்கள் முறையே — திருமுறை — பதிகம் — பாடல்களைக் குறிக்கும். அடுத்த இதழில் அப்பர் தேவாரத்தில் குறிக்கப்பெற்றுள்ள வைப்புத் தலங்களைப் பற்றிய செய்திகள் வெளியிடப் பெறும்

– ஆதாரம்: க. வெள்ளைவாரணனாரின் 'பன்னிருதிருமுறை வரலாறு' முதல் பகுதி.

– தொகுப்பு: இரா. செ.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

We, the undersigned visited the temple. The Devasthanam staff showed to us all the places inside the temple. The temple is kept very clean.

(Sd) T. R. RAMAKRISHNAN,

(Sd) Velayudham,

27—8—75 (Addison & Co., Ltd., Madras-2)

# "ஆசாரக் கோவை" - ஓர் அறிமுகம்*

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, பி. ஏ.,

## ஆசாரக் கோவை :

'செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க செய்யாமை யானுங்கெடும்' என்பது வள்ளுவர் கூறும் அறிவுரை. அல்லன வற்றைச் செய்தலும் பிழை; நல்லனவற்றைச் செய்யாமையும் பிழை; உண்மைதான். செய்யத்தக்க அறங்கள் யாவை? செய் யக்கூடாத பாவங்கள் யாவை? இவைபற்றி முழுவதும் அறிவது கடினந்தான். பேரறங்களை அறியாவிட்டாலும் பிழையில்லை. அன்றாட நடைமுறை வாழ்க்கையில் சில நியதிகளையாவது மேற் கொள்ளவேண்டாமா? வேண்டும் என்று எளிதாக விளக்கு கிறது 'ஆசாரக்கோவை'.

## பெருவாயின் முள்ளியார் :

கற்றோர்கள் கடைப்பிடித்து ஒழுகும் வாழ்க்கை நெறிகளைவிட, தேர்ந்த கல்வியறிவில்லாதவர்கள் சமுதாய வழக்கங்களை அனுப வத்தால் அறிந்து கடைப்பிடிக்கும் நெறிமுறைகள் உறுதியுடை யனவே. பேரறங்களைப்பற்றிய ஆராய்ச்சி தேவைதான். ஆனல் அவற்றை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பில்லாதார்க்கும் எளி தான நடைமுறை ஒழுக்கங்களைச் சொல்லவேண்டும் என்பது முறைதானே. அந்த முறைதெரிந்த பெரியார் 'பெருவாயின் முள்ளியார்'.

## இருநிலை :

ஆசாரக் கோவை பதினெண் கீழ்க்கணக்கு நூல் தானு? பெருவாயின் முள்ளியார் சைவ சமயத்தவர் என்பதற்கு ஆதார முண்டா? அவர் ஊர்ப்பெயராகக் குறிக்கப்படும் 'வண்கயத்தூர்' எது? இந்நூலுக்கு ஆதாரம் வடமொழி 'சுக்கிர நீதி' என்பது எந்த அளவுக்குப் பொருந்தும் என்றெல்லாம் ஆராய்கிறவர்கள் ஆராயட்டும். அது உயர்ந்த வளர்ச்சிநிலை. நமது ஆர்வம் எல்லாம் ஆசாரங்களை அறிய முற்படுவதாகவே அமைகிறது.

---

* ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம், திருவாரூர் ஸ்ரீ அப்பர் ஆலயத்தில், தைச் சதய விழாவில் (16—1—1975) ஆற்றிய உரையைத் தழுவி எழுதிய கட்டுரை.

## ஆசாரமாவது யாது ?

'நம்ம சமாச்சாரம்' தெரியுமா? என்று கோபத்திலே பலர் பேசக் கேட்டிருக்கிறோம். தன் இயல்பினை வெளிப்படுத்துவதாகவே இவ்வழக்கு அமைகிறது. சமய ஆசாரம் என்பதே 'சமாச்சாரம்' ஆகியிருக்கிறது. எனவே, 'ஆசாரம்' என்பது நடைமுறை ஒழுக்கம் அல்லது நடைமுறை நியதி என்றே பொருள் தருகிறது. *'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற குறட்பாவில் நடைமுறை ஒழுக்கத்தை மேற்கொள்ளாதார் கீழ் மக்களாகிய கயவர் என்று விளக்கப்படுகிறது. சிவஞானபோதச் சிற்றுரையில் மாதவச் சிவஞான சுவாமிகள், மெய்கண்டார் கடவுள் வாழ்த்தினை அருளியதற்குக் காரணம் விளக்கும்போது †'ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும்' என்பர். எனவே, சான்றோர் ஒழுக்கங்களை – மேற்கொண்ட நடைமுறைகளை – பின்பற்றி ஒழுகுவது தெய்வத்தன்மையுடைய பெரியோர்களுக்கும் கடமை என்பது விளங்குகிறது.

## ஆசார வித்து :

பல்வேறு அறங்களும், ஒழுக்கமும் இருப்பினும் ஆசாரக் கோவை எளிய இனிய அறங்களை மட்டுமே வற்புறுத்துகிறது. இந்நூல் பேசும் பல்வேறு ஆசாரங்களுக்கும் அடிப்படையான விதைபோன்ற அறங்கள் இவை என்று தொகுத்துச் சுட்டுவதன் மூலமாக – நூற்கருத்தை முன்னதாகவே தெரிந்துகொள்ளுகின்றோம். திருக்குறளைப்போல ஒரு ஒழுங்குமுறை இல்லாதிருக்கலாம். அது, யாவர்க்கும் எளிதாக விளங்குதற்பொருட்டு மேற்கொண்ட முயற்சியால் நேர்ந்திருக்கவேண்டும். திருக்குறள் அறத்துப்பால் பேசும் 'செய்ந்நன்றி அறிதல்', 'பொறையுடைமை', 'இனியவை கூறல்', 'இன்னா செய்யாமை', 'ஒப்புரவறிதல்' ஆகிய ஐந்துடன், பொருட்பால் விளக்கும் 'கல்வி', 'அறிவுடைமை', 'பெரியாரைத் துணைக்கோடல்' ஆகிய மூன்றும் கூட்டி, இவ்வெட்டினையும் 'ஆசார வித்து' எனக் குறிக்கிறது இவ்வறநூல்.

"நன்றி யறிதல்; பொறையுடைமை; இன்சொல்லோடு,
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை; கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல்; அறிவுடைமை;
நல்லினத் தாரோடு நட்டல்; இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து" (பாடல்-1)

---

* குறள் எண். 1075.

† சிவஞானபோதம் – சிற்றுரை – மங்கல வாழ்த்து.

ஒரு தொகுப்பு :

இவற்றை வரிசைப்படுத்தியோ, தனித்தனி எடுத்தோ இந் நூல்முறையாகக் கூறவில்லை. அடிப்படை கூறுதன் மூலம் தன்னிலை விளக்கிவிட்டு – நடைமுறை ஒழுக்கங்களைப் பேசவருகிறார். ஒழுக்கம் பிழையாதிருந்தால் பெறும் பேறுகள் யாவை? எவ்வ வற்றைப் பேணிப் போற்றவேண்டும்; வைகறையில் செய்ய வேண்டும் கடமைகள் என்ன; 'எச்சில்களை' எவ்வாறு - எவ் விடத்தில் – எவ்வெவற்றில் நீக்கவேண்டும்; நீராடுவது எங்ங னம்; ஆடை அணிவது எவ்வாறு; உணவுகொள்ளும் பாங்கு எவ்வணம்; நீரை எங்ஙனம் பருகவேண்டும்; காலை மாலைகளில் செய்வன – தவிர்வன யாவை? தூங்கும் முறை எப்படி? எவை நரகந்தரும்; எவ்வெவற்றைச் சிந்திக்கக்கூடாது; துணையோடு எவ்வெந்நாட்களில் உறவாடல் தகாது; இல்லம் பேணுவது எம்முறை; யார் யார் மாட்டு எவ்வெவ்வாறு ஒழுகுவது; நன் மாணுக்கர் செயல் என்ன? குலமாதர் போற்றுவன யாவை? புகத்தகா இடங்கள் யாவை? இப்படி வேறு எந்த ஒரு நூலிலும் நிறைவாகக் காணமுடியாத பல செய்திகளை, இந்நூலில் அமைந் துள்ள நூறு பாடல்களும் விளக்குகின்றன.

அனுபவ வெளிப்பாடு :

மேற்கொண்ட, அனுபவத்தின் விளைவாகக் கூறப்படும்செய்தி களுக்கு – கண்ட முடிபுகளுக்கு என்றுமே சிறப்புண்டு. ஆயின், காரண – காரிய அடிப்படையில் ஒவ்வொன்றிற்கும் விளக்கம் கூற இயலாது; அது தேவையற்றதுவும் ஆகும்.

"வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை."

வைகறையில் துயில் நீங்குக; அறம் – பொருள் முயற்சிகளை ஆராய்ந்து வாய்க்கும் இடமறிந்து செய்க; தந்தையையும் – தாயையும் தொழுதுப் பின் எழுக என்பது பாட்டின் கருத்து. ஏன் வைகறையில் எழவேண்டும் – ஏன் தந்தை தாயை வணங்கி எழவேண்டும் என்ற வினக்களும், இப்படிச் செய்வதால் என்ன பயன் என்ற வினக்களும் எழுவது இயல்பே. இவற்றிற்கெல்லாம் ஒரே விடை 'முந்தையோர் கண்ட முறை' என்பதே. எனவே வாழ்க்கை வழங்கிய படிப்பினையே இங்கே ஆசாரக் கோவையாக

மலர்கிறது. சில செயல்களின் உள்ளீடு புரியாதிருக்கலாம். ஆனால் அவற்றை மேற்கொள்ளுவதால் விளையும் நடைமுறை உயர்ச்சியினை — மெல்ல மெல்ல நாமே உணர முடியும் என்பதே ஆசாரக் கோவையால் உணர்த்தப்படுவது.

## நீராடும் வேளைகள் :

நாட்காலையிலே நீராடுவது நமது வழக்கம். ஆசாரக் கோவை எவ்வெச்செயல்களுக்கு முன்னும் பின்னும் நீராட வேண்டும் என விளக்குகிறது. திருக்கோயில் வழிபாட்டுக்கு முன்னும், தீக்கனுக்கண்டபோதும், வாலாமையாகிய தூய்மை குறைந்தபோதும், உண்டதை வாந்தி எடுத்தபோதும், மயிர் களைந்துகொண்ட பின்னும், உண்ணுதற்கு முன்னும், பொழுதேறத்தூங்கி எழுந்தகாலையும், புணர்ச்சி நிகழ்ந்த பின்னரும், கீழ்மக்களைத் தீண்டியவிடத்தும், மலங்கழித்தபின்னரும் ஐயமின்றி நீராடவேண்டுமென்கிறது ஆசாரக்கோவை. இவையாவும், தம்மையும், தம்மைச் சார்ந்தாரையும் நோய் முதலியவற்றினின்றும் காக்கத் துணையாவதை உய்த்துக்கொண்டு உணர வேண்டும்.

ஆடையின்றி நீராடாதே; ஓராடைமட்டும் உடுத்துக் கொண்டு உண்ணுதே; உடுத்தியிருந்த ஆடையை நீர்நிலையிலேயே பிழியாதே; ஒற்றையாடையுடுத்து, சான்ளேர் அவை புகாதே என முந்தையோர் கண்ட முறை உணர்த்தப்படுகிறது. எண்ணெய்தேய்த்து முழுகுதல்பற்றி ஒரு செய்தி புதிதாகக் கிடைக்கிறது. தலையில் எண்ணெயைத்தேய்த்த கையோடு உடம்பினைத் தொடல் ஆகாது என்பதும், எண்ணெய்தேய்த்து நீராடற்கு ஆகாத நாட்களில் எண்ணெய்தேய்த்து முழுகநேர்ந்தால் எண்ணெயோடு சிறிது நீர்கலந்து தேய்த்துக்கொள்ள வேண்டுமென்பதும் அறிவுறுத்தப்படுகிறது.

## பொது அறங்கள் :

நீருள் தோன்றும் தம் நிழலை விரும்பி நோக்கக்கூடாது. இரவில் மரத்தின்கீழ்த் தங்கக்கூடாது. காய்ச்சல் இருக்கினும் தலைமுழுகாமல் நீராடக்கூடாது. தண்ணீரில் நீந்தவோ, உமியவோ, திளைக்கவோ, விளையாடவோ கூடாது என்பன வெல்லாம் ஆய்ந்த அறிவினவர் கண்டுரைத்த கட்டளைகள்.

> " அரசன், உவாத்தியான், தாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவர் இவர் இவரைத்
> தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
> யாவருங் கண்ட நெறி "

என ஐம்பெருங்குரவரை வழிபடவேண்டுமென்ற பொது நியதிகளையும் ஆசாரக்கோவை மறக்காமல் நினைவூட்டுகிறது.

காலைக் கழுவிக்கொண்டு, கழுவிய ஈரம் புலராமலேயே உணவுகொள்ளவேண்டும். ஆனால் ஈரம் முற்றிலும் காய்ந்த பிறகே படுக்கையில் சேரவேண்டும் எனக் கட்டளை இடுகிறது இந்நூல்.

**பல்வகை ஆசாரங்கள் :**

“யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி” என்கிறது திருமந்திரம். ஆசாரக்கோவை, விருந்தினர், மூத்தோர், பசு, பறவைகள், குழந்தைகள் ஆகியோருக்கு முன்னர் உணவு படைத்த பின்னரே தாம உண்ண வேண்டுமென நடைமுறை வழக்கினை உரைக்கிறது.

கிழக்கு நோக்கி அமர்ந்து உண்ணவேண்டும்; வாயிற்படிக்கு நேரே உட்கார்ந்து உண்க; ஆனல், வாயில் எதிரே கட்டிலிட்டு உறங்கற்க என்பது அனுபவ வெளிப்பாடாக மலர்கிறது.

இனிப்பை விருந்தில் முதலிலும், கைப்பனவற்றைக் கடைசியிலும், எஞ்சிய சுவைகளை இடையிலும் உண்ண வேண்டுமென்று கூறும் ஆசாரக்கோவை, பெரியோருடன் உணவுண்ண நேர்ந்தால் அவர்களுக்கு வலப்புறத்து அமர்தல் ஆகாது; அவர் உண்ணுமுன் உண்ணுதல் தகாது; அவர்கட்கு அருகில் நெருங்கி அமர்தல் ஆகாது; அவர்களுக்குமுன் எழுந்திருத்தலும் கூடாது என வரையறுக்கிறது.

> “ இருகையால் தண்ணீர் பருகார்; ஒருகையால்
> கொள்ளார்; கொடார் குரவர்க்கு; இருகை
> சொறியார் உடம்பு மடுத்து ”

என நீர்பருகுதல் முதலிவற்றில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் இங்கே காண்கின்றோம். உறங்கும்போது வடக்கிலும், கோணத்திசைகளிலும் தலைவைத்துப்படுத்தல் விலக்கப்படுகிறது.

**சமய நெறிகள் :**

இரண்டு தெய்வங்களுக்கு இடைபுகுந்து போதல்கூடாது என்கிறது ஆசாரக்கோவை. நமது சைவத் திருக்கோயில்களில்

சிவலிங்கத் திருமேனிக்கும் நந்தியெம்பெருமானுக்கும் இடையில் ஊடறுத்துப்போதல் விலக்கப்பட்டிருப்பது கருதத்தக்கது. கால்களை ஒன்றோடொன்று தேய்த்துக் கழுவுதலை ஒழுக்கநூல் அறிவினர் கூடாது என விலக்கியுள்ளார்கள்.

பகலில் உச்சிவேளை, நள்ளிரவு, பகல் இரவு சந்திக்கும் காலை, மாலைப்பொழுதுகள், சிவனுக்கு உகந்த ஆதிரை, விஷ்ணுவுக்கு உகந்த திருவோணம் ஆகிய நாட்கள், உவா நாட்களாகிய அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமியாகிய திதி, தாம் பிறந்த நாள் ஆகிய இவையெல்லாம் மனைவியோடு உடன் உறைதற்கு ஆகாதநாட்கள் என விளக்குகிறது ஆசாரக்கோவை.

" உச்சியம் போழ்தோடு இடையாமம் ஈரந்தி
மிக்க இருதேவர் நாளோடு — உவாத்திதிநாள்
அட்டமியும் ஏனைப் பிறந்தநாள் இவ்வனைத்தும்
ஒட்டார் உடனுறைவின் கண் "

என்பன அறங்கூறும் ஆசாரவரிகள். நோய் வேண்டாம் என்று விரும்புகிறவர்கள் எவ்வெவ்விடங்களுக்குச் செல்லக்கூடாது என்று அறிய விருப்பமுண்டா ? இதோ,

" பாழ்மனையும், தேவகுலனும் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்
தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்
நோயின்மை வேண்டு பவர் "

என்னும் பாடல் விடை கூறுகிறது.

சில தீய ஒழுக்கங்களை ஒரு பாடல் விளக்குகிறது, பிறர் உடம்பைப் பார்த்து, 'உங்கள் உடம்பு நன்றாக உள்ளது' என்று கூறுதல் ஒரு தீய பழக்கம். விளக்கினை வாயால் ஊதி அவிப்பதும், அடுப்பினுள்ளேயே தீயை அணைப்பதும், அடுப்புத் தீயில் குளிர்காய்வதும் உடலியலுக்குத் தீங்கு பயக்கும் என்கிறது பாட்டு.

காலத்துகந்த கருத்து :

இக்காலத்திற்கு மிகத் தேவையான பாட்டு ஒன்று. பொது இடங்களில் யார் யார்க்கு வழிவிட்டு ஒதுங்குதல் வேண்டும் என்கிறது.

" பார்ப்பார் ; தவரே ; சுமந்தார் ; பிணிப்பட்டார்
மூத்தார் ; இளையார் ; பசு ; பெண்டிர் என்றிவர்கட்கு

ஆற்ற வழி விலங்கினாரே பிறப்பிடை
போற்றி எனப்படு வார்"

இச்செயலை மேற்கொள்ளுவாரே பிறரால் வாழ்த்தத்தக்கவராவர் என்பது கருத்து.

## அறிவு; உணர்வு:

அறிவினும், மனிதன் உணர்வுகளுக்கு அடிமையானவன் என்பதை உணர்ந்த ஆசிரியர் இரவில் யார்யாருடன் தனித்திருத்தல் கூடாது என விலக்குகின்றார்.

" ஈன்றாள்; மகள்; தன்உடன்பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தமித்தா உறையற்க; ஐம்புலனும்
தாங்கற்கு அரிது ஆகலான்."

'ஐம்புலனும் தாங்கற்கு அரிது ஆகலான்' என்ற தொடர் குறிப்பிடத்தக்கதாகிறது. வணங்கத்தக்கவர்களாகிய ஐம்பெருங் குரவர்களைக்கூட சில இடங்களில் வணங்குதல் ஆகாது என விதிக்கிறது ஆசாரக்கோவை. அரசனது அரண்மனை, இறையவர் உறையும் கோயில், அரசனது ஊர்வலம், தெய்வங்களது விதியுலா இவற்றில் நேர்ப்படினும் பெரியோரை வணங்குதல் தவிர்க்கப்படுகிறது.

## இறுதியிற் சில வரிகள்:

குலமாதர்கள் தம் கணவனது மேனியையன்றி, பிறரை ஏறெடுத்தும் நோக்கார்; தம் அழகையும் கருதிப்பார்த்திரார்; தலைமயிரைக் கையால் கோதமாட்டார்; விரல்களையும் நொடித்தலைச் செய்யமாட்டார் என அவர்தம் திறம் கூறப்படுதல் மகிழ்வூட்டுகிறது. மற்றும் கட்டிலிற்கிடப்பார்க்குப் பூச்சூட்டல், சாந்து பூசுதல், கால் கழுவுதல் முதலியனவற்றை விலக்கி, தலைவைத்த பூவை நுகரக்கூடாது; நுகர்ந்தபூவைச் சூடக்கூடாது என அறிவுரைகூறி நடையிடும் ஆசாரக்கோவை, சிலருக்குக் கூறப்பட்ட ஆசாரங்களிலிருந்து விலக்கும் அளிக்கிறது.

" அறியாத தேயத்தான்; ஆதுலன்; மூத்தான்;
இளையான்; உயிரிழந்தான்; அஞ்சினான்: உண்டான்;
அரசன்தொழில் தலைவைத்தான்; மணாளன் என்று
ஒன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான
ஆசாரம் வீடு பெற்றார்."

இவ்வாறு நடைமுறை ஒழுக்கம் கூறும் ஆசாரக் கோவையை அறிவதும், அறிந்து மேற்கொள்ளுவதும் செய்தற்கு ஒரு திறவுகோலாகவே இக் கட்டுரை நிற்கிறது.

# செய்திகள்

### தருமையாதீனத்தில்

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சைவ - சமயாசாரியர்களுள் மூன்றுமவராகிய ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளின் குருபூஜை விழா 13—8—1975 புதன்கிழமையன்று தருமையாதீனத்தில் சிறப்பாக நடந்தேறியது. திருவஞ்சைக்களத்தில் தங்கியிருக்குங்கால், திருக்கயிலாயத்திலிருந்து, சிவபெருமான் திருவருளால் சுந்தரமூர்த்தி சுவாமிகளை அழைத்தேக வெள்ளானை வந்தது. "தானெனை முன் படைத்தான்" என்ற பதிகத்தை அருளிச் செய்து கொண்டு, தம் கெழுதகை நண்பர் சேரமான்பெருமாள் நாயனார் குதிரை மீது உடன் எழுந்தருளச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலைக்கு ஓர் ஆடிச் சுவாதித் திருநாளில் எழுந்தருளினர். இந்த ஐதீகத் திருநாள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், காலையில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சமயாசாரியர்களுக்கு அபிடேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடும், மாலை சுந்தரமூர்த்திசுவாமிகள் புராண படனமும் இனிதாகக் கொண்டாடப் பெற்றது. இரவு வெள்ளானை வாகனத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், குதிரை வாகனத்தில் சேரமான்பெருமாள் நாயனாரும் எழுந்தருளுவிக்கப்பெற்று வேத பாராயணம் - தேவார - திருமுறைப் பாராயணங்களோடு திருவீதியுலாக் காட்சி நிகழ்ந்தேறியது. டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும், பேராசிரியர். திரு. வி. சபேசனார் அவர்களும் திருவீதியுலாத் தொடக்கத்தில் அற்புத விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

### திருபுவனம்

## ஸ்ரீ சரபேசுவரர்க்குக் கால்கோடி அருச்சனை நிறைவுவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சரபேஸ்வரருக்குத் தருமையாதீனம் 26 வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் உலக நலங்கருதி கோடியருச்சனையை

23—9—73 அன்று தொடங்கியருளினார்கள். 17—8—75 ஞாயிற்றுக் கிழமையன்று திருபுவனம் குமார் சில்க் ஹவுஸ், கும்பா. ராம நா. பார்த்தசாரதி அவர்கள் உபயமாக நிகழ்த்தப் பெற்ற ஏகதின லட்சார்ச்சனையுடன் கால்கோடி அருச்சனை நிறைவுற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்று எழுந்தருளி 26 வது லட்சார்ச்சனையைத் தொடங்கிவைத்து, வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். நண்பகல் ஸ்ரீ சரபேசுவரர்க்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன. இரவு தஞ்சாவூர் சகோதரிகள் குமாரி, இலட்சுமி, குமாரி யமுனா குழுவினரின் 'வள்ளியம்மைதிருமணம்' இன்னிசைக் கதை நடைபெற்றது நூற்றுக்கணக்கான அன்பர்கள் ஸ்ரீ சரபேஸ்வரரை வழிபட்டு உய்ந்தனர்.

## சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள்

1—8—75 மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழ நாயனார், 4—8—75 கூற்றுவ நாயனார், 12—8—75 பெருமிழலைக்குறும்ப நாயனார், 13—8—75 சோமாசிமாற நாயனார், 16—8—75 கலிய நாயனார்' கோட்புலி நாயனார் குருபூஜைகள் நடைபெற்றன. குருபூஜையின் போது புலவர். திரு. N. இராசு பெரியபுராணம் வாசித்து விரிவுரை செய்தார். அதன்பின் வந்திருந்த அன்பர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாள்

13—8—75 தேதியன்று சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை சிறப்பு விழாவாக நடத்தப்பட்டது. விழாவிற்கு திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைமையுரையில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள், தருமையாதீனம் சைவத்தையும் தமிழையும் சிறந்த முறையில் பரப்பிவருகிறது என்றும், சுந்தரர் கயிலாயத்திலிருந்து மண்ணுலகில் பிறந்து முதலை உண்ட பாலனை எழுப்பினது போன்ற பல அற்புத நிகழ்ச்சிகளையெல்லாம் செய்தார் என்றும், சுந்தரர் செந்தமிழை ஒவ்வொருவரும் போற்றிப் படித்து பயன் பெறுவது இன்றியமையாதது என்றும் சொல்லி அருளுரை வழங்கினார்கள். பின்னர், வித்துவான். திரு. C. ஜெகந்நாதாச்சாரியார் "சுந்தரர் செந்தமிழ்" என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார். சுந்தரருடைய செந்தமிழைக்கேட்பதற்காக இறைவன் மிகவும் விருப்பம் கொண்டான் என்றும், அவருடைய செந்தமிழ்

முதலை உண்ட பாலனை எழுப்பியது என்றும், சுந்தரரின் செந்தமிழின் மேன்மையைத் தெளிவுபடுத்தினார். "பித்தாபிறைசூடி" என்ற பாடலுக்கு சிறந்த விளக்கம்கொடுத்துப்பேசினார். பின்னர் திரு. N. R. முருகவேள் "திருக்கயிலாய ஞானஉலா" என்ற பொருள்பற்றி விரிவுரை ஆற்றினார். ஏனைய உலாக்கள்போல விளங்குவதுதான் ஞானஉலா. ஏனைய உலாக்களுக்கு உள்ள ஏழு பருவ நிலைகளைப்போல பக்தி மார்க்கத்திற்கும் ஏழு பருவ நிலைகள் உண்டு என்று விளக்கி தெளிவுபடுத்திப் பேசினார்.

## திருவாசக வகுப்பு

திங்கள்தோறும் மாலையில் நிலைய மன்றத்தில் திருவாசக வகுப்பு தருமையாதீனப்புலவர், திரு. N. R முருகவேள் அவர்களால் நடத்தப்பட்டுவருகின்றது. 1975 ஆகஸ்ட்மாதத்தில் திருப்பூவல்லி – திருவுந்தியார் பகுதிகள் நடைபெற்றன. வகுப்பிற்கு சுமார் 75 அன்பர்களுக்குக் குறையாமல் வந்து கேட்டுப் பயனடைகின்றனர்.

---

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

### மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

சந்திரன் கதிரவன் தருபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திரம் மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந் துய்ம்மினே.

— ஞானசம்பந்தர்

நிகழும் இராட்சசஆண்டு புரட்டாசித்திங்கள் 15ம் நாள் (1—10—1975) புதன்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருமயேந்திரப்பள்ளி ஸ்ரீ வடிவாம்பிகை உடனாய ஸ்ரீ திருமேனி அழகர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடு நடைபெறும். தலத் திருப்பதிகம் பாராயணமும், விரிவுரையும் நிகழும் திருமயேந்திரப்பள்ளி திருப்பதிகம் நூல் வழங்கப்பெறும். அன்பர்கள் கலந்து கொண்டு வழிபட்டு இன்புறுவார்களாக.

கடிதம் :

ம. செல்வராஜ்

டோக்கியோ,
25—7—75.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பாதாரவிந்தங்களுக்கு அடியேன் செல்வராஜ் சிரம்தாழ்த்தி வணக்கம்செலுத்துகின்றேன். நான் சென்ற ஜுன் மாதம் 19உ சென்னையிலிருந்து சிங்கப்பூர்வழியாக விமானத்தில் 11 மணி அளவில் டோக்கியோ நகரம் வந்துசேர்ந்தேன். நான் டோக்கியோ நகரத்தில்தான் தங்கியிருக்கின்றேன். இதுவரையில் 5 வாரங்களாக ஜப்பானிய மொழியைக் கற்றுக்கொண்டேன். ஜப்பானிய மொழியின் அடிப்படை இலக்கணமும் தமிழ்மொழியின் இலக்கணமும் மிக ஒற்றுமையாக இருப்பதால் எனக்குமிகவும் சுலபமாக இருக்கிறது. இங்கு உணவைத் தவிர மற்றவிதத்தில் நான் மிகவும் சௌகரியமாக இருக்கிறேன். நான் சைவ உணவு சாப்பிடுவதால் ஒன்றிரண்டு வகை உணவையே திரும்பத் திரும்ப உண்ணவேண்டியிருக்கிறது. ஆனால் சத்துள்ளதாக இருக்கிறது அடுத்த வாரம் ஜப்பானில் சில முக்கிய நகரங்களுக்குச் செல்கிறேன், ஆங்கில மாதம் ஆகஸ்டு 4ந் தேதியிலிருந்து துறைமுகம் கட்டட நிர்மாண வேலையில் பயிற்சிபெறப்போகிறேன். டிசம்பர் மாதக் கடைசிவரை ஜப்பான் நாட்டில் இருப்பேன். இந்தநாடு பல வகையிலும் முன்னேறி இருக்கிறது. எந்த வேலைக்கும் இயந்திரங்கள்தான் இருக்கின்றன. மின்சார ரயில்கள் பல திக்குகளுக்கும் செல்கின்றன. உலகில் அதிகமானவேகத்தில் செல்லக்கூடிய மின்சார ரயில்கள் இங்கு இருக்கின்றன. ஒரு மணி நேரத்தில் 200 கிலோ மீட்டர்கள் செல்கின்றன.

நான் ஆசிய மாணவர்கள் சங்கத்தில் தங்கியிருக்கின்றேன். என்னுடன் இந்தியர்கள் தவிர பலநாட்டு மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள். இங்கு என்னுடைய வாழ்க்கை மிகவும் புதியதாகவும், உற்சாகமாகவும் இருக்கின்றது. நம்முடையவேலைகளை நாமே இங்கு செய்து கொள்ளவேண்டும். இங்கு வேலையாட்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது மட்டுமில்லாமல் தன்னம்பிக்கையும் வளருகிறது. ஜப்பான் நாடு நில அளவில் மிகவும் சிறியது. இயற்கை வளமும் மிகவும் குறைவு. இயற்கையின் கொடுரங்களும் அதிகம். அப்படியிருந்தும் அவர்களுடைய முன்னேற்றம் நம்மை அதிக வியப்படையச்செய்கிறது. இங்கு என்னுடைய பயிற்சி நல்ல சிறந்த முறையில் நடைபெறவும் நல்ல உடல் நிலையில் இருக்கவும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய ஆசியைவேண்டுகின்றேன். இங்ஙனம் அடியேன்,

(ஒ-ம்) ம. செல்வராஜ்.

# எதிர்காலம்


ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


( ஸ்ரீஇராக்ஷஸஹு புரட்டாசிமீ 1௳ முதல் 31௳ முடிய )

(17—9—75 முதல் 17—10—75 முடிய)

ஸ்ரீ இராட்சஸஹு புரட்டாசிமீ 1௳ புதவாரம் அவிட்ட நக்ஷத்திரத்தில் கௌலவகரணத்தில் சூரிய உதயம் முதல் 21 நாழிகை 38 விநாடிக்கு, மகரலக்னத்தில் ஸ்ரீ லோகஇரட்சகரான சூரியபகவான் கன்னியாராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்கிறார். சங்கிரமகரண தேவதை பன்றிவாகனத்தில் விசித்திர ஆடையுடுத்தி ஸ்வர்ண ஆபரணம் அணிந்து, மகிழம்பூ மாலையுடன் சந்தனம் பூசி, முறத்தில் மாவு உண்டு, கலப்பையைக் கையில் கொண்டு இலச்சை முகத்துடன் வடக்கு முகமாகப் பயணமாகிறார். அதன் பலன் உலகெங்கும் சஸ்ஸிய தானிய பயிர்கள் விருத்திகரமாகி சுபிட்சம் ஏற்படும். உலகில் விஞ்ஞான புதுமைகளும், நூதன பொருள்கள் படைப்பும், ஏற்பட்டு மக்கள் அனுபவிக்க வரும். சூரியன் புதன் சம்யோகத்தால் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, இசை, நடனம் முதலான கலைகள் நாகரிகத்துடன் மிளிரும். மக்கள் புத்தி தீட்சண்யமாக சரஸ்வதித்துவ ஞானத்துடன் விளங்குவார்கள். தர்மஸ்தாபனங்கள், திருமடங்கள், ஆசாரிய பீடங்கள் தழைத்தோங்கும். தெய்விக அருளுடையோர்களால் தேவாலயங்களில் லோக சுபிட்சார்த்த பூசனுதி வழிபாடுகள் சிறக்க, தேசங்களில் எங்கும் மனுநீதி சம்ரட்சணையில் பிரஜைகள் தெய்வீக உணர்வுடன் க்ஷேமகரமாக நேர்மை வாழ்க்கை நடத்துவார்கள்.

## 1. மேஷம் – அசுவ்தி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். இம்மாதம் ஏற்படுகின்ற கிரகங்களின் சஞ்சாரத்

தால் மனோதைரியம் மேலிடும். ஜீவனோபாய தொழில் துறை உத்தியோகத்தில் சிறப்பைத்தரும். பூமி இயந்திர வகையில் எதிர் பார்த்த பலனையடைய ஏதுவாகும். பெற்றோர் நலமும் சகோதரர் குடும்ப மேன்மையும், புத்திரர்களின் முன்னேற்றமும் மகிழ்ச்சி யளிக்கும். அரசாங்கத்தில் கௌரவம் உண்டாகும். முயன்ற காரியங்கள் சித்தியாகும். புதன், வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனைத்தரும். குடும்பம் சுபகரமாகவும் தனதாய சௌகரியங்க ளுடனும் இருந்துவரும். வாக்கு பாருஷ்யமாயினும் நெறிமுறையை வற்புறுத்தும். சுக சௌகரியம் மேலிடும். அரசாங்க கௌரவமும் சமூகத்தினரிடையே நன்மதிப்பும் ஏற்படும். எடுத்த காரியங்கள் சிறப்புற நடைபெறும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனவசதி சீராக இருந்துவரும். ஜீவனோபாய தொழில் துறையில் சிரமம் தோன்றும். உடலில் இரத்தாதிக்க மாக இருக்கும். எழுத்து மூலிய லேவாதேவிகளில் ஒப்பந்தங் களில் சிறு சர்ச்சையும் கால தாமதமும் ஏற்படினும் சுபர் பார்வை யால் நன்மையாகவே முடியும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். சந்திரலக்கினத்தில் உள்ள சனிக்கு இராசி அட்ச கங்களில் குரு திருஷ்டி இருப்பதால் தேகநலன் திருப்திகரமாக அமையும். மற்றக் கிரகங்களினால் பணவசதியும் பழையபாக்கிகள் வசூல் ஆகி நிறைவும் ஏற்படும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். பச்சை, சிவப்பு பதித்த ஆபரண பிராப்தி உண் டாகும். பூமி, இயந்திர வாகன அபிவிருத்திகளில் பொருள் முதலீடு ஆகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )

சிம்மராசி 9பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரானபலனை நடக்கும் தனம் தானியம் பெருகும். குடும்பத்தில் சுபகரமான செலவுகளாகவே இருந்துவரும். அரிய புத்தி சத்தியையும் நற்புகழையும் கொடுக்கும். எல்லாக்காரியங்களிலும் ஆதாயம் இருந்து வரும். சகோதரர்களின் ஒற்றுமை, புத்திரர்களின் நலம் சந்துஷ்டியளிக்கும். ஜீவனோபாயத் தொழிலில் பிரசித்தம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி– உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும் தனவசதி திருப்திகரமாக இருக்கும். பந்துமித்திரர்கள் விசுவாசமாக இருந்துவருவார்கள். ஜீவனோபாயத் தொழில் துறையில் எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற்றத்தையடைய வாய்ப்பு உண்டாகும். கண், நரம்பு சம்பந்த ரோகம் அல்லது பெற்றோருக்கு அரிஷ்டம் வந்து உடன் வைத்தியத்தால் நீங்கும். துர்க்காசூக்த ஜெபம் செய்ய நலம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். தன விஷயத்தில் பந்துமித்திரர்களிடையே மனமாறுதல் ஏற்படச்செய்யும். உடலில் பலவீனம் காட்டும், மூதாதையர் பொருள் அல்லது பாகப் பிரிவினையில் ஓர் சர்ச்சை வந்து நீங்கும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தியாலும், தெய்வபலத்தாலும் நிறைவேறும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். குடும்ப நலம் பெருகும். தனவசதி சரளமாக இருந்துவரும். புத்திரபாக்கியம் ஏற்படும். தெய்வபக்தி மிகுந்து காணும். சுயார்ச்சிதமேன்மையைக்கொடுக்கும். பதவி பட்டங்கள் கிடைக்கும். வியாபாராதி தொழில் துறையில் இலாபம் கிடைக்கும். சொந்தமாக நிலபுலன்கள் ஆர்ச்சிதமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனச் செலவு அதிகரிக்கும். 8 இல் உள்ள சனியை குரு பார்ப்பதால் கண்டங்களினின்றும் தப்பச்செய்யும். கிரியைஸ்தானம் பாபர்கள் வீட்சணம் பெறுவதால் எந்த ஒரு காரியத்திலும் அநேக தடங்கல்களும் பாதிப்புமாக இருக்கும். மேலிடங்களில் அல்லது எதிர்பார்த்த விஷயங்களில் கருதியபடி நடக்கத் தயக்கமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - க. கி. )

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். இம்மாதம் முற்பகுதியைவிட 11உ க்குமேல் செவ்வாய் பலம் பெறுவதால் சிவந்த பொருள்களின் லாபமும், வீடு, மனை பிராப்தியும் உண்டாகும். வலுவில் வந்த சச்சரவுகளில் ஜெயானுகூலம் ஏற்படும். இருணங்கள் தீரும். மனைவி மூலிய ஆதாயங்களையும் சௌக்கியத்தையும் கொடுக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
( கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனைத்தரும். தனவசதியும், பிரபுநேசமும், அவர்களால் அனுகூலங்களும் ஏற்படும். எதிர்பாராத தனலாபத்தை ஏற்படுத்தும். சரீர சுகமும், தேஜசும் ஏற்படும். செய்தொழிலில் சிரமம் தோன்றும். ஆயினும் ஒய்வு ஏற்படும். எல்லாக்காரியங்களும் தெய்வபலத்தால் ஆகும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்!

12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி
( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனாக நடக்கும். பணம் வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். புத்திரர் புத்திரிகளால் அபரிமிதமான பொருள் செலவாயினும் அவர்களுக்கு அதிக கஷ்டம் ஏற்படாது. குடும்பத்தில் தொழில் துறைகளில் மன அதிருப்தியான சம்பவங்கள் நேர்ந்தாலும் எல்லாக்காரியங்களும் பூர்த்தியாக நடந்துவரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.